விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 22 வியாழக்கிழமை (06.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 077

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# வரம்பு மீறுகிறார் நவநீதம்பிள்ளை!

## சர்வதேச விசாரணையை ஏற்கமுடியாது என்கிறார் பீரிஸ்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் வரம்பு மீறிச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை மற்றும் சர்வதேச விசாரணை கோரும் பிரேரணை ஆகியவற்றை இலங்கை நிராகரிக்கின்றது என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவைக்கூட்டத் தொடரில் இலங்கையின் சார்பாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இராணுவத்தினர் ஒருபோதும் சிவில் நிர்வாகத்தில் தலையிடுவ

19 ஆம் பக்கம் பார்க்க..

## 5 கைக்குண்டுகள் யாழில் மீட்பு

யாழ்ப்பாணம் மணியந்தோட்ட பகுதியிலிருந்து 5 கைக்குண்டுகள் புதைக்கப்பட்ட நிலையிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இவ் மீட்புச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் மணியந்தோட்டம் 3ஆம் குறுக்குத் தெருவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த இடத்தினைச் சேர்ந்த வீட்டார் தமது வீட்டு வளவில் கிணறு வெட்டுவதற்காக குழி தோண்டியுள்ளனர். இதன்போது கைக்குண்டுகள் வெளிவரத் தொடங்கியதையடுத்து குறித்த வீட்டார் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அறியப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து யாழ். பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து இராணுவத்தினரின் உதவியுடன் அங்கிருந்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கைக்குண்டுகள் செயலிழக்க வைப்பதற்காக இர்ராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-4)

## கூட்டமைப்பை தடை செய்யுங்கள்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியை தடை செய்ய வேண்டுமென பிரதி அமைச்சர், முன்னாள் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் நலன்க

19 ஆம் பக்கம் பார்க்க..



## வயோதிப பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகப் பகுதியில் வயோதிப பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வேலணை சிற்பனை பகுதியிலுள்ள பாழடைந்த வீடு ஒன்றின் அத்திபாரத்தின் மேல் குறித்த சடலம் காணப்பட்ட நிலையில்

20 ஆம் பக்கம் பார்க்க..

## 116 மீனவர்கள் நேற்று உண்ணாவிரதம்

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 116 பேர் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று நண்பகல் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நீதிமன்றங்களின் உத்தர

20 ஆம் பக்கம் பார்க்க..

## மன்னார் மனித புதைகுழி அகழ்வுப்பணி நிறுத்தம்

(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் மனித புதைக்குழியில் இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த மனித எலும்புக்கூடுகள் அகழும் பணிகள் நேற்று புதன்கிழமையுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை பகுதியில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 20-ம் திகதி நீர் இணைப்பிற்காக குழியொன்று தோண்டிய போது எலும்புக்கூடுகள் உள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் மன்னார் நதவானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 23-ம் திகதி தொடக்கம் இம்மாதம் 3-ம் திகதி திங்கட்கிழமை வரை 32 தடவைகள் குறித்த மனித புதைகுழி மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் தோண்டப்பட்டது.

இதன்போது சுமார் 80 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் உத்தரவிற்கமைவாக மீட்கப்பட்ட குறித்த எலும்புக்கூடுகள் மற்றும்

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஐ.நா பிரேரணையை ஆராய்வதற்கு கால அவகாசம் கிடைக்கவில்லை

### இப்படி கூறுகிறது இந்தியா



(டெல்லி)

ஐ.நாவின் பிரேரணையை ஆராய்ந்து பார்ப்பதற்கு இந்திய அதிகாரிகளுக்கு போதிய கால அவகாசம் கிடைக்கவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் நடைபெற்ற பிம்ஸ்டெக் (BIMSTEC) மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் மீள நாட்டிற்குத் திரும்பிய அவர், ஊடகவியலாளர்களிடம் இந்தக் கருத்தினைக் கூறியுள்ளார்.

இலங்கையின் வடபகுதி மக்களின் தேவைகளை தமது தமிழக நண்பர்கள் மற்றும் விமர்சகர்கள் நினைவில் வைத்திருப்பார்கள் என தாம் எண்ணுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

வடபகுதிக்கான விஜயத்தில் தாம் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில், இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படக் கூடாது என்ற எந்தவொரு கோரிக்கையும் இந்தியாவிடம் முன்வைக்கப்படவில்லை என அவர் சுட்டிக்

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காக்களுக்கான கட்டணம் அதிகரிப்பு!

(கொழும்பு)

தேசிய வனவியல் பூங்காக்களுக்கான நுழைவுச்சீட்டுக்களின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு வனவிலங்கு மற்றும்பொழுது போக்குத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி தற் சமயம்அறவிடப்படும்வனவியல் பூங்காவுக்கான நுழைவுச்சீட்டுக்களின கட்டணம்60 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம்கிடைகும் வருமானம் வனவியல் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் என திணைக்களம் மேலும் தெரிவிக்கிறது. (செ-1)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6668)


# திருடப்பட்டது துவிச்சக்கர வண்டி

(யாழ்ப்பாணம்)

பூட்டிவிட்டு பாதுகாப்பாக விடப்பட்ட துவிச்சக்கரவண்டி திருடப்பட்ட சம்பவம் சுன்னாகத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பெண்ணொருவர் தனது புதிய துவிச்சக்கரவண்டியை பாதுகாப்பாக பூட்டிவிட்டு சுன்னாகம்மக்கள்வங்கிக்கு சென்றுள்ளார்.

வந்துபார்த்த போது தனது துவிச்சக்கர வண்டி குறித்த இடத்தில் இல்லாமையால் அதிர்ச்சியடைந்துள்ளார்.

இதைத்தொடர்ந்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இவ்விடயம் தொடர்பில் முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த அதே இடத்தில் பலமுறை இவ்வாறான துவிச்சக்கர வண்டித் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளதுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளதாகவும் தெரிவிககப்படுகிறது. (செ-5)

# சட்டங்களை மீறுவோர் தொடர்பில் தகவல் வழங்கினால் பணப்பரிசு

(கொழும்பு)

நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்கள் தொடர்பில் சரியான தகவல்களை வழங்குபவர்களுக்கு பணப்பரிசு வழங்குவதாக நுகர்வோர் விவகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்கள்கள் தொடர்பில் கிடைக்கப் பெறும் தகவல்களை அதிகரிப்பதனை நோக்காகக் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தெரிவித்தார்.

நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்கள்கள் தொடர்பில் வழங்கப்படும் தகவலகளின் மூலம் கைப்பற்றப்படும் பொருட்களின் பெறுமதியினை கணக்கிட்டு அதில் ஒரு தொகைக்கான பணப் பெறுமதியை தகவல் வழங்கியவருக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (செ-11)


## TCT Multi Trade Centre இல் விற்பனையாகும்

Double Energy Saving Para Lights LED Bulbs மூலம் ஏனைய மின்விளக்குகளுக்கு பயன்படுத்தும் மின்சாரத்தில் 75% - 90% சேமிக்க!!!!!!
(LED என்பது சுருள் பல்புகளோ U-பல்புகளோ இல்லை. இவை ஒரு புதிய கண்டுபிடிப்பு.

| | 3W = 25W | 5W = 35W | 5W = 50W |
|---|---|---|---|
| வாட்ஸ் சேமிப்பு | 22W | 30W | 45W |
| வழக்கமான விலை | ~~700/=~~ | ~~950/=~~ | ~~1200/=~~ |
| யாழ்ப்பாணத்திற்கான அறிமுக விலை | 400/= | 500/= | 700/= |




6 மாதங்களுக்கு உத்தரவாதம்

Para Lights இன் ஏனைய தயாரிப்புகள்




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நுளம்பு ராக்கெட் (Mosquito Swatters) | 590/= | 2 | நுளம்பு கொல்லி (Mosquito Killer) | 990/= |
| 3 | ஈ/பூச்சிக் கொல்லி (Pest Killer) | 2190/= | 4 | 300m சேச் லைட் (Search Light) | 990/= |
| 5 | அவசர மேசை விளக்கு (Emergency Table Lamp) | 790/= | 6 | LED லாம்பு மற்றும் பேட்டரி சார்ஜர் Solar Lantern with 7 LED bulbs | 990/= |

TCT Multi Trade Centre இல் (527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) இத் தயாரிப்புகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்!!

விநியோகஸ்தர்கள் தேவை. மொத்த கொள்வனவிற்கு, 0789 13 08 13 / 0788 745 253 அழையுங்கள்

(5757)


## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

### அறிவித்தல்

### கணக்காய்விற்கான மீதிகளை உறுதிப்படுத்தல்

### கிராமிய வங்கி நிலையான வைப்பு, ஏனைய வைப்பு சங்க வருமதி, செல்மதி

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கத் தின் 31.05.2013 காலப் பகுதிக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சங்க கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் சகல வாடிக் கையாளர்களும் எதிர்வரும் 12.03.2014, 13.03.2014, 14.03.2014 ஆகிய நாட்களில் சமுகமளித்து தங்கள் புத்தகப்படியான மீதிகளை கிராமிய வங்கிப் புத்தகங்களுடன் ஒப்பிட்டு உறுதிசெய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.


சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களை வைத்திருக்கும் சகல வாடிக்கையாளர்களும் மேற்படி கணக்காய்விற்காக 14.03.2014-ந் திகதிக்கு முன்னர் சங்கக் காரியாலயத்தில் கடமை நாட்களில் சமுகமளித்து 31.05.2013 இல் தங்கள் மீதிகளை உறுதிப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

(C-6677) - பொது முகாமையாளர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
01
03
1961

உதிர்வு
04
02
2014



முத்துவேல் பேச்சியம்மா


கடந்த 04.02.2014 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் முத்துவேல் - பேச்சியம்மா அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு அன்னாரின் இல்லத்தில் 06.03.2014 (வியாழன்) இன்று நடைபெறும்.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு அம்மாவின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கள்ளப்பாடு வடக்கு,
முல்லைத்தீவு

குடும்பத்தினர்
077 075 299

(C-6676)



ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

ஓம் சச்சிதானந்த பரப்ரம்மா புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகபதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

## ஸ்ரீ ஸ்ரீமான் கல்கிபகவானின் 66-வது ஜன்மதின மஹோற்சவப் பெருவிழா

### நகர சங்கீர்த்தனமும் ஸ்ரீ அம்மா பகவானின் விசேட WEBCAST தரிசனமும்

இடம் :- கதிரமலைச் சிவன் கோவில் தேவஸ்தான மணி மண்டபம் (ஸ்ரேசன் றோட், சுன்னாகம்)

காலம் :- 07.03.2014 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி

அன்பர்களே !

உலகில் மனித குலத்திற்கு ஜீவன் முக்தியை அளித்து துன்பமில்லாத சந்தோஷமான வாழ்வுபெற அனுக்ரகம் செய்ய அவதரித்துள்ள ஸ்ரீ அம்மா பகவானின் 66-வது ஜென்மதினம் அன்று காலை 7.00 மணியளவில் சுன்னாகம் ஐயனார் கோவில் வீதியிலுள்ள சுவர்ணயுக ஆலயத்திலிருந்து நகர சங்கீர்த்தனத்துடன் பக்தர்கள் பாற்குடமேந்தி சிவன் கோவில் மண்டபத்தையடைந்து பாதுகாபிஷேகம் நடைபெற்று பகவானின் WEBCAST தரிசனமும் (10.00 மணிக்கு) இடம்பெறும்.

பக்தர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்து ஸ்ரீ அம்மா பகவானின் அருள் தீட்சையைப் பெற்று உங்கள் வாழ்வில் ஆனந்தத்தை அடைய அன்புடன் அழைக்கின்றோம்.

✹ மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்க ஒன்றியம்
யாழ்.மாவட்டம்.

(5758)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஹோட்டல் அநுபவம்

இரண்டு நண்பர்கள் வீதியில் நீண்டநேரம் பேசிக்கொண்டே நின்று கொண்டிருந்தார்கள். திடீரென்று அந்த இரண்டு பேருக்குமே பசித்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். எதிர்த்தாற் போல் ஓர் ஹோட்டல். அங்கு போய் சாப்பிடலாம் என்று முடிவு செய்தார்கள். அந்த ஹோட்டலுக்குள் போய் உட்கார்ந்தார்கள். என்னென்ன விருப்புமோ , எல்லாத்தையும் ஓடர் செய்தார்கள். பிரமாதமாக சாப்பிட்டார்கள். வயிறு நிறைந்த மாதிரி இருந்தது.

இப்போதுதான் அடுத்து வர இருக்கும் பிரச்சினையைப் பற்றிய நினைவு அவர்களுக்கு வந்தது. பில் வரும் இல்லையா? அந்த பில்லை இரண்டு பேரில் யார்கொடுப்பது என்பதில் அவர்களுக்குள் போட்டி வந்தது. "நான்தான் உன்னை கூட்டிக்கொண்டு வந்தேன். அதனால் நான்தான் பில்லைக் கொடுப்பேன்" என்று அவர்களில் ஒருவர்சொல்கிறார். "அதெல்லாம்இல்லை. நான்தான்கொடுப்பேன்" என்று அடுத்தவர் அடம்பிடிக்கிறார். இது குறித்து இரண்டு நபர்களுக்கிடையே வாக்கு வாதம் வந்துவிட்டது.

இதை உட்கார்ந்து இருந்த முதலாளி கவனித்துக் கொண்டே வந்தார். "பாருங்களேன், நண்பர்கள் என்றால் இப்படி அல்லவா இருக்கவேண்டும்" என்று அவர் புளகாங்கிதம் அடைந்தார்.

அந்த நேரம் பார்த்து சர்வர் பில்லைக் கொண்டு வந்தார். பில்லை எடுத்துக் கொண்டு ஓர் இரண்டு ரூபாயை மட்டும் அவருக்கு டிப்ஸ் ஆக வைத்துவிட்டார்கள்.

பின்னர் பில்லை எடுத்துக் கொண்டு வந்தார்கள். வரும் வழியில் கூட , "நான்தான் கொடுப்பேன். நான்தான் கொடுப்பேன்"" என்று இரண்டு பேருக்குமிடையே வாக்குவாதம்.

இந்நிலையில், முதலாளியிடம் சொல்கிறார் ஒரு நண்பர், "ஐயா, பில்லுக்குரிய பணத்த இவரிடமிருந்து வாங்காதீர்கள். ஏனென்றால், நான்தான் இந்த ஹோட்டலுக்கு அவரை அழைத்து வந்தேன். அதனால் நான்தான் பில்லை கொடுப்பேன். அவர் கையை நீட்டினாலும் நீங்கள் பணத்தை அவரிடம் வாங்கக்கூடாது" என்றார்.

உடனே மற்றொரு நண்பர் சொன்னார், "இல்லை நான்தான் 'நல்ல ஹோட்டலாக இருக்கிறது. இங்கே சாப்பிடலாம்' என்று இவரைக் கூப்பிட்டேன். அதனாலே, நான்தான் இந்த பில்லை கொடுப்பேன்" என்று இப்படி இரண்டு பேருக்குமிடையே நீண்ட நேரம் பிரச்சினை நடக்கிறது. ஹோட்டல் முதலாளி பார்த்தார்.

'இவ்வளவு நட்புடன் இரண்டு பேரும் இருக்கிறார்களே... இதிலே ஒருத்தருக்கொருத்தர் மன வருத்தப்படுகிற மாதிரி நடந்துகொள்ள வேண்டாம். அதற்கு நாம் ஒரு ஏற்பாடு செய்யலாம் என்று நினைத்து ஹோட்டல் முதலாளி ஒரு முடிவுக்கு வந்தார். இருவரையும் பார்த்து அவர், "அமைதியாக இருங்கள். இரண்டு பேருடைய அன்பையும் நான் புரிந்து கொண்டேன். இதை பாராட்டுகிற முறையிலே, நான் உங்களுக்கு ஒரு பரிசு கொடுக்கப் போகிறேன்" என்று சொன்னார். தொடர்ந்து "அது என்ன பரிசு தெரியுமா? நீங்கள் இரண்டு பேருமே பில் பணத்தைக் கொடுக்க வேண்டாம். உங்களுடைய இந்த அன்பைப் பாராட்டி, இந்த ஹோட்டலில் நீங்கள் சாப்பிட்டதை மிகவும் பெருமையாக நினைத்து, பில் பணத்தை வாங்காமலேயே நான் உங்களை அனுப்பி வைக்கப் போகிறேன் "என்றார்.

"பரவாயில்லை" என்று இரண்டு பேரும் வெளியே வந்துவிட்டார்கள். வெளியே வந்து, நீண்டதூரம் நடந்த பின்னர் "பார்த்தியா? போட்ட பிளான் கரெக்டா ஒர்க் அவுட் ஆகிவிட்டது. நம்முடைய நாடகத்தை அந்த ஹோட்டல் முதலாளி உண்மை என்று நம்பிவிட்டார். அதனாலே,பில்லை வாங்காமல் அனுப்பிவிட்டார்" என்று சொல்லிக்கொண்டு ஒருத்தருக்கொருத்தர் கையைக் குலுக்கிக் கொண்டார்கள்.

இந்த மாதிரி மனோபாவம் சமூகத்தில் இருந்தால், வியாபாரம் செய்பவர்கள் நிலைமை என்ன ஆகும்? அதனாலே, சாப்பிடப் போகிறவர்களும் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும். ஹோட்டல் காரக்களும் எச்சரிக்கையாக இருந்துகொள்ள வேண்டும். ஹோட்டலில் ஒருத்தர் சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறார். சாப்பிட்டில் எடுக்க எடுக்க கல்லாக வருகிறது. எடுத்த கற்களை எண்ணிப் பார்க்கிறார் அவர். ஏழு கல் இருந்தது. ஏழு கற்களையும் வரிசையாக எடுத்து வைத்துவிட்டு, சர்வரை கூப்பிட்டு, "என்னய்யா? சோற்றிலே ஏழு கல் இருக்கிறது என்றார். அதற்கு சர்வர் சொன்னார், நாங்கள் அளவு சாப்பாட்டிலே அவ்வளவுதான் போடுகிறோம்" என்று.

"முதலாளியைப் பார்க்க வேண்டும்."

"பார்க்க முடியாது."

"எங்கே போயிருக்கிறார்?"

"அவர், வேற நல்ல ஹோட்டலைப் பார்த்துச் சாப்பிடப்போயிருக்கிறார்" என்று அந்த சர்வர் சொன்னான்.

ஹோட்டலில் பில் கொடுக்கிற விவகாரம் பற்றி பேசினோமே. இன்னொரு ஹோட்டலில் ஏகப்பட்ட கூட்டம். கல்லாப்பெட்டியில் 20 பேர் நின்று கொண்டிருக்கிறார்கள், கையை நீட்டிக்கொண்டு பில் கொடுப்பதற்கு. அதிலே ஒரு ஆளுக்கு ஏதோ ஒரு பிரச்சினை வந்துவிட்டது. அவர் 25 ரூபாய்க்குச் சாப்பிட்டு இருக்கிறார். கல்லாவிலிருந்தவர் 25 ரூபாயை அவரிடம் திருப்பிக் கொடுத்தார், அவர் 50 ரூபாய் கொடுத்திருக்கிறார் என்ற அனுமானத்தில் உடனே அந்த ஆள் சொல்கிறார். "என்னய்யா, நான் நூறு ரூபாய் கொடுத்து இருக்கிறேன். நீ மிச்சம் 75 ரூபாய் தரவேண்டுமே. வெறும் 25 ரூபாய்தான் தருகிறாய்? "என்று." நீங்ககொடுத்தது நூறு ரூபாய் இல்லை. 50 ரூபாய்தான்" என்று கல்லாவிலிருந்தவர் வாதாடுகிறார். இரண்டு பேருக்கும் கடுமையான சண்டை.

இந்தச் சண்டைக்கு நடுவிலே என்ன ஆயிற்று என்றால், கூட்டத்திலே நின்று கொண்டிருந்த மற்றொரு ஆள், "நீங்க போடுகிற சண்டையிலே நான் கொடுத்த 500 ரூபாயை மறந்துவிடாதீர்கள்" என்று சொன்னார். உண்மையில், இன்னும் அவர் பணமே கொடுக்கவில்லை. சந்தடி சாக்கில் சாகசம் செய்றது இதுதான்.

*இளசை சுந்தரம்*

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலக்கிய போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேசமகளிர் தினத்தையொட்டி நல்லூர் பிரதேச செயலகத்தினால் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக குறித்த பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் கவிதை, சிறுகதை, கட்டுரையாக்கம் என மூன்று பிரிவுகளாக நடத்துப்படவுள்ளன.

இதில் கவிதைப் போட்டியானது பெண்ணியம் சார்ந்த தலைப்பில் 10 செய்யுளடிகளுக்குஉட்பட்டதாகவோ புதுக்கவிதையாயின் 30 வரிகளுக்கு உட்பட்டதாகவோஅமையலாம்.

சிறுகதையானது பெண்ணியம் சார்ந்த தலைப்பில் பொதுவான சிறுகதை அமைப்பு விதிகளுக்கு அமைவாக எழுதலாம்.

கட்டுரையானது பெண் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றிற் கான தீர்வுகள் தொடர்பான கருப் பொருளில் ஆயிரத்து 500 தொட க்கம் 2 ஆயிரம் வரையான சொற் களில் எழுதலாம்.

பொது நிபந்தனைகளாக, போட்டியில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் பங்குபற்றமுடியும். ஆக்கங்கள் யாவும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சார்ந்தவையாக இருத்தல் வேண்டும். இவ்வாக்கங்கள் சுய ஆக்கங்களாக இருப்பதுடன் இதற்கு முன்பு போட்டிகளுக்கோ, பிரசுரங்களுக்கோ அனுப்பப்பட்ட தாக இருத்தலாகாது. சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள், ஏ4 தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் தட்டச்சு செய்தோ அல்லது சுயகையெழுத் திலோ சமர்ப்பிக்க முடியும். ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் 14 ஆம் திகதிக்குமுன்னர்ஏற்றுக் கொள்ளப்படும். போட்டியில் வெற்றியீட்டு வோருக்கு பரிசில்களும் சான்றி தழ்களும் வழங்கப்படும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதா கும். ஆக்கங்களைச் சமர்ப்பிப்போர் கிராம உத்தியோகத்தரின் அத்தாட்சிப்படுத்தலுடன் சமர்ப் பிப்பது கட்டாயமானமானதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவால் நடத்தப்படவுள்ள நவீன ஆடை வடிவமைப்பும் தயாரிப்பும் மனை முகாமைத்துவம், அடிப்படை எழுத்தறிவூட்டல், இரண்டாம் மொழி சிங்களம், தலையலங்காரம், கேக் ஐசிங் வடிவமைப்பு, வீட்டு மின்னிணைப்பு, உடையமைத்தல், கணனி ( Graphic Designing), கைவினைக் கலை, சிங்களம், ஆங்கில மொழித்திறன் விருத்தி ஆகிய பயிற்சி நெறி போதனாசிரியர் பதவிகளுக்குப் பொருத்த மானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை வலிகாமம் கல்வி வலயத்தில் பெற்று எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்பாக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார். மேலும் பயிற்சி நெறியில் இணைந்து கொள்பவர்களையும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதன்பிரகாரம் யா/இராமநாதன் கல்லூரியில் நவீன ஆடை வடிவமைப்பும், தயாரிப்பும் யா/குட்டியபுலம் அ.த.க.பாடசாலையில் மனைமுகாமைத்துவமும் யா/குளமங்கால் றோ.க.த.க. பாடசாலையில் அடிப்படை எழுத்தறிவூட்டலும் யா/பன்னாலை கனகசபை அ.த.க.பாடசாலையில் இரண்டாம் மொழி சிங்களமும் யா/கூவில் திறந்த பாடசாலை (திறந்த பாடசாலை) யில் தலையலங்காரம், கேக் ஐசிங் வடிவமைப்பும் யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் ம.வியில் மனைமுகாமைத்துவமும் வீட்டு மின்னிணைப்பும் யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூ ரியில் உடையமைத்தலும் யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.வில் அடிப்படை எழுத்தறிவூட்டலும் யா/மாதகல் விக்னேஸ்வராக் கல்லூரியில் மனைமுகாமைத்துவமும் யா/இளவாலை வருத் தப்படாத இளைஞர் கழகத்தில் கணனியும் யா/அராலி இந்து க்கல்லூரியில் கைவினைக் கலையும் யா/சுதுமலை வடக்கு றோ.க. த.க.பாடசாலையில் சிங்களமும் யா/ஆனைக்கோட்டை றோ.க.த. க.பாடசாலையில் ஆங்கில மொழித்திறன் விருத்தியும் யா/இணுவில் இந்து கல்லூரியில் கணனி கற்கை நெறியும் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 20 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 50 | 90 |
| தக்காளி | 15 | 20 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 25 | 40 |
| கரட் | 80 | 70 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 45 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 80 | 80 |
| பாகற்காய் | 90 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 90 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 50 |
| பயற்றங்காய் | 100 | 150 | 80 |
| லீக்ஸ் | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 20 | 30 | 40 |
| கறிமிளகாய் | 80 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 300-500 | 400 | 400 |
| போஞ்சி | 60 | 60 | 100 |
| கத்தரிதம்புள்ள | 15 | 25 | - |
| கீரை - 1 பிடி | 5-10 | 15 | 25 |
| தேசிக்காய் | 50-70 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 60-90 | 80 | 100 |

# இராசி பலன்

*6.03.2014*

*(மாசி 22, வியாழக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு*

*பஞ்சமி முற்பகல் 9.03 மணிவரை*

*பரணி முன்னிரவு 6.46 மணிவரை*

*இராகுகாலம் 1.55-3.25 மணிவரை*

*சுபநேரம் 7.55-9.25 மணிவரை*

*சஷ்டி விரதம்*

**மேடம்** கனவு பலிதமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், தேகநலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** சேமிப்பில். சிறிது கரையலாம், பக் குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் கூடும், சயனசுகக் குறைவான நாள்.

**மிதுனம்** மற்றவர்கள் பாரட்டும் வகையிலான செயலொன்றை செய்து காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிங்கம்** வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழிலில் ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் விலகுவர்.

**கன்னி** குடும்பத்திலுள்ளவர்களை கோபமாக பேசிவிட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம், வரவைப்புதுச்செலவுகள் ஏற்படலாம், வேலைகள் உடனுக்குடன்முடியாமல் இழுத்தடிக்கப்படலாம்.

**துலாம்** வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு** பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், வியாபார விருத்தியுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், உடன் பிறப்புகள் உதவி செய்ய முன்வரலாம், குடும்பப் பொறுப்புகள் கூடும், இழுபறியாக இருந்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்** பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், இறை வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய நாடகப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள்

(சாவகச்சேரி)


தென்மராட்சி கல்வி வலய சைவ சமயப் பாடப்பிரிவினரால் வலயப் பாடசாலைகளுக் கிடையே நடத்தப்பபட்ட சைவ சமய நாடகப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி முதலாம் இடத்தை மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், இரண்டாம் இடத்தினை வரணி மத்திய கல்லூரி மூன்றாம் இடத்தை சாவகச்சேரி மகளிர் கல்லூரியும் பெற்றுள்ளன.

அத்தோடு கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், மிருசுவில் அ.த.க பாடசாலை, விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளன.

இவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் தென்மராட்சி கல்வி வலய சைவ சமய பரிசில்கள் நிகழ்வில் வழங்கப்படவுள்ளதாக தென்மராட்சிவலயக் கல்வி பணிப் பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார்.

(அ-9-29)



நன்றி:-ஜலன்ட்




## கி.சிவநேசனின் நிறைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஏற்பாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிட்டிணன் சிவநேசனின் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் திக்கம் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த கிட்டிணன் சிவனேசனின் நினைவு நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அக் கட்சியினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(அ-6)

## தம்பிராசாவின் கொட்டகைகள் நேற்று அகற்றப்பட்டுள்ளன

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நேற்றுடன் 13 ஆவது நாளாக தொடர்ந்து வரும் தம்பிராசாவின் சத்தியாக்கிரக போராட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கில் கொட்டகைகள் அகற்றப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்ப ட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் தனது போராட்டத்தை முடித்து விட்டு பி.ப 5 மணியளவில் அவ்விடத்தை விட்டு நீங்கியதாகவும் மறுநாளான நேற்று தான் வழமைபோன்று போராட்டத்தில் ஈடுபடவந்த போது கொட்டகைகளும் எதிர்ப்பு சுலோகங்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தம்பிராசா கூறினார்.

வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டுவரும் அடக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவருமான தம்பி க.மு தம்பிராசா, வலி. வடக்கு, மற்றும் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கடந்த 13 நாட்களாக சத்தியாக்கிரகப் போராட்டத்தினை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அவரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சத்தியாகிரகப்போராட்டத்திற்காக போடப்பட்டிருந்த தகரத்திலான கொட்டகை முற்றுமுழுதாக அகற்றப்பட்டுள்ள அதேவேளை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தொங்க விடப்பட்டிருந்த சுலோகங்களும் அகற்றப்பட்டுள்ளன.

இதேவேளை மேற்படி கொட்டகை அகற்றப்பட்டதிலும் சுலோகங்கள் அப்புறப்படுத்தப்பட்டதிலும் இராணுவத்தினர் தொடர்பு பட்டிருப்பதாக தம்பிராசா குற்றம்சாட்டியுள்ளார்.

(அ-6)

## மாணவர்களுக்கு கொடுப்பனவு வழங்கல்

தீபம் கல்வி நிறுவனத்தினால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட கல்வியில் ஊக்கமுள்ள மாணவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதற்காக பாடசாலையில் கல்வி பயில்கின்ற 15 வறிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கல்வி மேம்பாட்டிற்கு ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்த வகையில் கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு இல.140, பலாலி வீதியில் அமைந்துள்ள குறித்த அலுவலகத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினர்களாக பொது வைத்திய நிபுணர் டாக்டர் சிவன்சுதன், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சிவநாதன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சிவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# வடக்கு வாழ் தமிழ் மக்களின் அன்றாட தேவைகளையாவது பூர்த்தி செய்யுங்கள்

நீண்டகாலப் போரினால் பாதிப்புகளை எதிர்கொண்ட வடக்கு வாழ் தமிழ்மக்களின் அன்றாடத்தேவைகளையாவது நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில் சர்வதேச நாடுகளிடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றோம் .அந்த அடிப்படையில் ஜப்பான் நாட்டின் தூதுவரிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக்காலை 9 மணியளவில் வருகைதந்த இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் நொபுஹிட்டோ ஹோபோ வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்த சந்திப்பில், ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அதேவேளை வடக்கு மாகாணத்தில் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்னர் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிய வருகின்றது.

ஆளுநருடனான சந்திப்பினையடுத்து வடக்கு மாகாண முதலமைச்சரை யாழ்.சோமசுந்தரம் வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் முற்பகல் 10 மணியளவில் ஜப்பான் தூதுவர் சந்தித்து கலந்துரையாடினார். இந்தச்சந்திப்பினையடுத்து முதலமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலேயே அதிகம் பேசியிருந்தோம். அந்தத்திட்டத்தின் ஊடாக வடக்கில் கடந்த காலத்தில் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை வடக்கு மாகாணத்தில் தற்போது தேவைப்படுகின்ற உதவிகள் பற்றியும் ஜப்பான் தூதுவர் என்னிடம் கேட்டிருந்தார். இதன்போது நான் கூறியிருந்தேன், இங்கு பிரமாண்டமான அல்லது பாரியளவிலான உதவிகளை , அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்பாக, வடக்கில் கடந்த காலங்களில் இடம்பெற்ற நீண்டகாலப் போரினால் பாதிப்புகளை எதிர்கொண்ட வடக்கு வாழ் தமிழ் மக்களின் அன்றாடத்தேவைகளை முதலில் நிவர்த்தி செய்யவேண்டியுள்ளது என்றும், அவ்வாறு அவர்களின் அன்றாட தேவைகளையாவது நிவர்த்தி செய்தாலே போதும் என்ற நிலையில் தான் நாமும் உள்ளோம் என்றும் கூறியிருந்தேன்.

குறிப்பாக வன்னி மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் வண்டிகளின் தேவை அதிகமாக காணப்படுகின்றது. வீதிகள் சீரின்மையினால் அங்குள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

போக்குவரத்தில் அதிகமாக நெருக்கடிகளை எதிர்கொள்ளும் மக்களுக்கு அம்புலன்ஸ் மற்றும் வாகன வசதிகள் அதிகமாக தேவைப்படுகின்றது என்றும் கூறினேன்.

அதேவேளை வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் கேட்கும் உதவிகளையே ஜப்பான் தூதுவரிடமும் கேட்டிருந்தேன் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜெனீவா இல்லை.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வு தற்போது ஜெனீவாவில் இடம்பெற்று வருகின்றது. இந்த அமர்வு குறித்தும் அமெரிக்காவினால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை குறித்தும் ஏதாவது பேசப்பட்டதா எனக் கேட்ட போது அது குறித்து அவரும் கேட்கவில்லை. நானும் எதுவும் கூறவில்லை எனவும் அரசியல் ரீதியாக எதுவும் பேசப்படவில்லையெனவும் முதலமைச்சர் கூறினார்.

ஜப்பான் தூதுவர்

வடக்கு மாகாண முதலமைச்சருடனான சந்திப்பினையடுத்து கருத்து தெரிவித்த ஜப்பான் தூதுவர் நொபுஹிட்டோ ஹோபோ ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டு முதலமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளேன். இந்தச்சந்திப்புக்கள் மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றன. எமது நாட்டின் ஜெய்க்கா திட்டத்தின் கீழ்மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆராயவே நான் இங்கு வந்தேன். ஜப்பான் நாட்டின் உதவியானது வடக்கு மாகாணத்திற்கு மட்டுமல்லாது நாடு பூராகவும் தொடர்ந்து வழங்கப்படும். அதேவேளை இங்கு முதலமைச்சர் மற்றும் ஆளுநரினால் விடுக்கப்பட்ட வேண்டு கோள்கள் குறித்தும் ஆராய்ப்பட்டு சாதக மான முடிவுகள் எடுக்கப்படும் என்றார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குடிநீர் திட்டம்; யாழ்.ஆயரிடம் முறைப்பாடு

இரணைமடு நீரினை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதால் விவசாயிகள் எதிர் நோக்கக்கூடிய நெருக்கடி நிலைகள் குறித்து யாழ்.மன்ற மாவட்ட ஆயர் தோமஸ் சவுந் தரநாயகம் ஆண்டகையிடம் தாம் தெரி வித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரி வித்தனர்.

யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இரணைமடு விவகாரம் தொடர்பில் வடக்கு மாகாண சபையினால் நியமிக்க ப்பட்ட நிபுணர்குழுவின் ஆய்வின் முடிவு குறித்த விடயங்களும் மாகாண சபை மேற்கொண்ட தீர்மானம் தொடர்பிலும் யாழ்.ஆயரிடம் தாம் தெளிவாகக் கூறிய தாகவும் இரணைமடுக் குளத்தினை பார்வையிடுமாறு அழைப்பு விடுத்ததாகவும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் தாம் ஏற்க னவே அறிந்திருப்பதாகவும் இதன் உண் மையான முழுமை யான நிலைப்பாட்டினை தற்போது தாம் அறிந்து கொண்டதாகவும் யாழ்.ஆயர் தம்மிடம் தெரிவித்ததாகவும் கிளிநொச்சி விவசாயிகள் தெரிவித்த னர். (அ-2)

# தையல் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது நல்லூர் தொழிற் பயிற்சி நிலை யத்தில் சிறுவர் மற்றும் பெண்களுக்கான ஆடை வடிவமைப்பு கற்கைநெறியை ஆரம் பிககவுள்ளது.

இக்கற்கை நெறியானது தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சி யாகும்.

இக்கற்கைநெறியை கற்க விரும் புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12 , கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (அ-2)


## யாழ். பல்கலைக்கழகம், இலங்கை

### ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் களஞ்சியங்கள் I இலும் II இலும் உள்ள பின்வரும் பொருட்கள் 13.03.2014 வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| | |
|---|---|
| 1.A.V.R.Unit | 32.Parts Photo Copier Registration Roller |
| 2.Battery 12V 120A | 33.Shellac Gasket |
| 3.Battery 12V 90A | 34.Wall Plug |
| 4.Bulbs Incandescent 40W | 35.Battery Medium Size |
| 5.Bulbs Incandescent 60W | 36.Eraser Typing |
| 6.Bulbs Incandescent 75W | 37.Ink rot ring |
| 7.Choke 250W | 38.Paper manila |
| 8.D-Box 15A 10 way (wood) | 39.Toner hp lazer jet 2420- HP 11A |
| 9.D- Box 15A 8 way (wood) | 40.Typing Sheet |
| 10.Flange 2” | 41.Computer cartridge black |
| 11.GI Cap 1” | 42.Computer cartridge black- 8C03 |
| 12.GI Cap 2” | 43.Computer Cartridge colour |
| 13.GI Elbow 1 1/2” | 44.Computer Cartridge colour -13619 HC |
| 14.GI Elbow 1/2” | 45.Computer Cartridge colour-117G0060 |
| 15.GI Reducing Tee 1”x 3/4” | 46.Computer ribbon LQ 1050 |
| 16.GI Tee 1/2” | 47.Correcting film ribbon- Word processor |
| 17.GI Tee 3/4” | 48.Diskette 3.5 120MB |
| 18.Gate Valve 6” C.I | 49.Diskette 5.25 |
| 19.Gate Valve 4” C.I | 50.Film ribbon- Word processor |
| 20.Parts Computer Hard Disk 60 GB Quantum | 51.Ink copy printer |
| 21.Parts Computer CD Writer | 52.Nylon ribbon- word processor |
| 22.Parts Computer Net Work Cable | 53.Paper master A3 for copy printer Duplo DR 871 |
| 23.Parts Computer SD RAM 128 MB | |
| 24.Parts Computer UTP CAT 5 Cable | 54.Sealing wax |
| 25.Parts Duplicator Ink Screen - Skylos | 55.Shoulder guard |
| 26.Parts Duplicator paper separator- Skylos | 56.Sprials# 10 |
| 27.Parts Photo Copier Dev. Seal EAS 1769.000 | 57.Sprials#12 |
| 28.Parts Photo Copier Dev. Spacer (Front) | 58.Sprials#09 |
| 29.Parts Photo Copier Dev. Spacer (Rear) | 59.Styil |
| 30.Parts Photo Copier Halogen Heater | 60.Tape Liftoff for word processor |
| 31.Parts Photo Copier lamp | 61.Tracing paper |

மேற்படி பொருட்களை 11.03.2014 செவ்வாய்க்கிழமை அன்று மு.ப.9.00 இலிருந்து நண்பகல் 12.00 மணிவரை பல்கலைக்கழக களஞ்சியங்கள் I இலும் II இலும் பார்வையிடலாம்.

இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் 13.03.2014 வியாழக்கிழமை அன்று மு.ப. 10.00 மணியளவில் பல்கலைக்கழக களஞ்சியத்திற்கு சமுகமளிக்கவும். வெற்றி பெறுபவர்கள் பணத்தை பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திப் பொருட்களை 13.03.2014 அன்று 4.30 மணிக்கு முன்னர் அப்புறப் படுத்தல் வேண்டும்.

பதிவாளர். (சி-6669)



## பதவி வெற்றிடம்

யாழ் நகரப் பகுதியில் இயங்கும் பிரபல்யமான நிறுவன மொன்றுக்கு பெண் உத்தியோகத்தர்கள் தேவை.

தகைமை :-
க.பொ.த உயர்தரத்தில் சித்தி.
வயதெல்லை :-
35 வயது தொடக்கம் 50 வயது வரை

திருமணமாகாத பெண்களுக்கும் தமிழ்ப் புலமையும், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் தேர்ச்சியும் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தமது சுயவிபரங்களடங்கிய விண்ணப்பங்களை, (தொலை பேசி இலக்கத்துடன்)

விளம்பர இல : சி - 6649
மே/பா : வலம்புரி
இல. 03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 14<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: A/L / தாதி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2899 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 49 செவ் 2 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/1615 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 45.75 செவ் 4 இல்<br>உயரம்: 5’11"<br>தகைமை/தொழில்: BSc / வங்கியாளர்<br>தொ.இ: B/1113 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 51 செவ் 1 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: தாதி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/1616 |
| பிறப்பு: 1976 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 42.25 செவ் 4 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: A/L / கணனி இயக்குநர்<br>தொ.இ: B/1115 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 33.25 செவ் 2 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BA / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: G/1617 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 48 செவ் 8 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்<br>தொ.இ: B/1120 | பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 47.5<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BA, MED / ஆசிரியர்<br>தொ.இ: G/1619 |

### கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையார்கட்டு கிராமத்தில் மணல் அகழ்வு; தாம் பாதிக்கப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உடையார் கட்டு தெற்கு கிராம மக்களின் அனுமதியின்றி மண் அகழப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

மேற்படி கிராமத்திலுள்ள பாவாடைக்கல் ஆற்றிலேயே சட்டவிரோத மண் அகழ்வு இடம் பெற்று வருகின்றது.

இவ்வாறாக மண் அகழ்வு இடம்பெறு வதனால் கிராமத்திலுள்ள மண்வளம் பாதிக் கப்படுவதுடன் அன்றாடம் வாகனங்கள் செல் வதால் வீதிகளும் சேதமடைந்து தூசு படலமாக எழுவதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் இக் கிராமத்திலிருந்து மண் அகழப் பட்டு முல்லைத்தீவிலுள்ள ஏனைய பகுதி களுக்கும் வேறு மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றது.

மண் அகழ்வில் ஈடுபடுபவர்களிடம் இது தொடர்பில் கேட்டபோது, கனியவளம், பனை வளப்பகுதி, மத்திய சுற்றாடல் பகுதி, தொல் பொருள் ஆராய்ச்சி ஆகிய நான்கு திணைக் களங்களின் அனுமதி பெற்றே தாம் மண் அகழ்வை மேற்கொள்வதாகத் தெரிவித்துள் ளனர்.

இந்நிலையில், குறித்த திணைக்களத் தினர் கிராம மக்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவில்லையென மக்கள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

உடையார்கட்டுப்பகுதியில் 18கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 653 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படு மாயின் ஒரு வீட்டிற்கு 22 டிரக்டர் பெட்டி மண் தேவைப்படும். தற்போது நாளாந்தம் 20-25 டிப்பர் வாகனங்களில் மண் அகழ்வு இடம் பெறுவதால் கிராம மக்களின் வீட்டுத்திட்டத் தேவைக்கு அதிக பணத்தைக் கொடுத்து வேறிடங்களில் மண் பெற வேண்டிய துர்ப் பாக்கிய நிலை ஏற்படும்.

அது மாத்திரமின்றி மண் அகழ்வில் ஈடுபடு பவர்கள் தமக்கு இடையூறாகவுள்ள மரங்க ளையும் அழித்து வருகின்றனர்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலி ஸார், கிராம சேவையாளர், பிரதேச செயலர் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் தெரியப்படு த்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை.

இந்நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாறான மணல் அகழ்வு இடம்பெற்ற போது, மாவட்ட அரசாங்க அதிபர் கிளிநொச்சி மாவட்ட மண்வேறிடங்களுக்கு செல்வதை 2011 ஆம் ஆண்டு தடுத்து நிறுத்தினார் என்ப தை கிராம மக்கள் சுட்டிக்காட்டி இதே போன்ற தீர்வை தமக்கும் பெற்றுத் தருமாறு முல்லை மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(அ-9-267)




## சர்வதேச மகளிர் தினம் புதுக்குடியிருப்பில்

(முல்லைத்தீவு)

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலை யத்தி னரால் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடி யிருப்பு பிரதேச செயலக பொது மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலை யப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலை மையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் முல் லைத்தீவு உறுப்பினர் திருமதி மேரிகமலா குணசீலன், சிறப்பு விருந்தினர்களாக புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் இந்திரராஜன் பிரதாபன், மு/கைவேலி கணேச வித்தி யாலய அதிபர் திருமதி சிவராணி தங்க மயில், முல்லை. மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி குகணேச தாஸன் சரோஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அன்றைய தினம் போரினால் பாதிக் கப்பட்ட பெண்களின் குரல் எனும் மகஜ ரும் கையளிக்கப்படவுள்ளது.

(அ-9)



முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் அ பகுதியில் முதியோர் இல்லம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் சிறார்களின் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அடிக்கல் நாட்டப்படுவதையும் சிறுவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-குருமன்காடு, பூந்தோட்டச் செய்தியாளர்கள்)

# புகையிரத பாதுகாப்பு கடவையை அலட்சியம் செய்யுமாறு மக்கள்

## விபரீதம் நிகழலாம் என அச்சம்



(கிளிநொச்சி)

கனபுரம் வீதியிலுள்ள புகையிரத பாது காப்புகடவையைவீதிப்போக்குவரத்துப்பயணிகள் அலட்சியம் செய்வதனால் விபத்துக்கள் ஏற்ப டலாமென மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மேற்குறித்த வீதியினால் புகையிரதம் பய ணிக்கின்ற போது பாதுகாப்புக் கடவையினால் வீதி மூடப்படுகின்றது.

இதற்கென காவலாளி ஒருவரையும் அப் பகுதியில் நியமித்துள்ளனர்.

இந்நிலையில் பாதுகாப்புக் கடவையினூ பாக வீதியை மூடும் போது வீதியினால் பயணிப் பவர்கள் அதில் நிற்கின்ற காவலாளியின் சொல்லை மீறி கரையோரங்களினாலும் கடவையை தாண்டியும் செல்கின்றனர்.

இவ்வாறாக மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, முச்சக்கரவண்டிகளில் பயணிப்போரும் பாடசாலை மாணவர்களும் வீதியைக் கடக் கின்றனர்.

இதனால் இவர்கள் புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளாகக் கூடிய நிலைமை ஏற்படலா மென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, மக்களின் அசட்டயீனமான செயற் பாடுகளினால் உயிராபத்துக்கள் இடம்பெறாமல் இருக்க வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் புகையிரம் வரும்போது அவ்விடத்தில் நின்று வழிப்படுத்துவது அவசியமென மக்கள் வலி யுறுத்தியுள்ளனர்.

(அ-9-27)

# மல்லாவிப்பகுதி உணவகங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கை

(மல்லாவி)

மல்லாவி சுகாதார பிரிவிற்குட்பட்ட உண வகங்கள் மற்றும் தேநீர்ச்சாலைகளுக்கு தரச் சான்றிதழ் வழங்கும் கலந்துரையாடலும் பரிசோதனைகளும் நேற்று மல்லாவி பிர தேச சுகாதார அதிகாரி எம்.ஏ.வை. அலாபாத் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மேற்படி பிரதேசங்களிலுள்ள உணவுக் கடைகள் மற்றும் தேநீர்ச்சாலை களின் சுகாதாரம் தொடர்பாகவும் உணவுத் தரச்சான்றிதழ் வழங்குதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் 10 உணவுச்சாலைகளைச் சேர்ந்த உரிமையாளர்கள் கலந்து கொண்டதுடன் தரச்சான்றிதழ் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் விளக்கங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அத்தோடு மேற்படி உணவகங்களில் சுகா தாரப் பிரிவினரால் திடீர் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.

இதன் போது சுகாதாரத்திற்கு பங்கம் ஏற் படுத்தும் வகையில் காணப்பட்ட தவறுகளை உரிமையாளர்களுக்கு சுட்டிக்காட்டி இனி வரும் காலங்களில் இத்தவறுகள் இடம் பெறாது பார்த் துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நடவடிக்கைகள்மல்லாவி பகுதியில் இனி வரும் காலங்களில் தொடர்ச்சியாக இடம் பெற வுள்ளதாகசுகாதாரப்பிரிவினர்தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் கே.சிவகாந்தன் மல் லாவிப் பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் கே.லதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ-9-15)

# குமுழமுனை மத்தி கிராம அபி.சங்க நிர்வாக தெரிவை உடன் நடத்துக மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரி வின் கீழுள்ள குமுழமுனை மத்தி கிராம அபிவிரு த்திச் சங்கத்தின் நிர்வாகத் தெரிவை உடன் நடத்து மாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் குமுழமுனை மத்தி கிராம மக்கள் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி மீள்குடியேற்றம் செய்யப் பட்டனர்.

இந் நிலையில், மீள்குடியேறி இரண்டு மாதங்களின் பின்னர் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

அதன்பிறபாடு நிர்வாகத் தெரிவு இடம்பெற வில்லை. இக்கிராமத்தில் 243 இற்கும் மேற் பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் கிராமத்திற்கு முழுமை யான வீட்டுத்திட்டங்கள், மின்சாரம், வீதிப் புனரமைப்பு உட்பட ஏனைய கிராமத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் பங்களிப்பு முக்கிய மானதாகும்.

எனவே, கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவை உடனே நடத்தி கிரா மத்தின் அபிவிருத்திக்கு ஒத்துழைக்குமாறு சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

(அ-9-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக்கட்டுப்பாடு அவசியமில்லை ஆரோக்கியமான குழந்தைகளே தேவை

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ் பெண்களுக்கு குடும்ப கட்டுப்பாடு அவசியமில்லை எனவும் போர் அழிவுகளிலிருந்து மீளெழும் எமது தமிழினத்திற்கு ஆரோக்கியமான பிள்ளைப்பேறுகளே அவசியம் என வடக்கு மாகாண சபையின் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் கருவியான கொல், போஸ் கோப் கருவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

குடும்ப் திட்டமிடல் பணியக அமைப்பு வடமாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்தக் கருவியை கிளிநொச்சி பொதுமருத்துவமனைக்கு வழங்கியுள்ளது.

இங்கு வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி சத்தியலிங்கம் வருகைதந்து வழங்கி வைத்ததுடன் குடும்ப திட்டமிடல் பணியக அமைப்பின் உயர் அதிகாரிகள், ஓய்வுபெற்ற பெண் நோயியல் மகப்பேற்று சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பிரமிளா சேனாநாயக்கா உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் ப.சத்தியலிங்கம் மேலும உரையாற்றுகையில்,

கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கும் இந்த மாவட்டத்தில் பயன்பெறும் இந்த வைத்தியசாலையை அண்டிய மக்களுக்கும் இன்று இங்கே குடும்ப திட்டமிடல் பணியகத்தால் வழங்கப்பட்ட பெண்களுக்குரிய கருப்பைக் கழுத்துப்புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டறியும் கருவி மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது.

வடமாகாணம் எமது அமைச்சின் எண்ணங்களுக்கு அமைய நூற்று ஒரு நாட்கள் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கிளிநொச் சி, முல்லைத்தீவு,மன்னார், வவுகனியா மாவட்டங்களை உள்ளடக்கி சுகாதார அமைச்சுடன் இணைந்து சுகவனிதையர் சிகிச்சை நிலையங்களை உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனன.

கடந்த காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பல்வேறு போர், அதனுடைய நேரடி, மறைமுக தாக்கங்கள் மூலம் மக்கள் பல்வேறு உள உடல் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள நிலையில் நமது சமூகத்தை மருத்துவ ரீதியாக திட்டமிட வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் எமக்கு உண்டு.

இந்த பிரதேசங்களில் 40 சதவீதமான மந்த போசாக்கு நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக இந்த துறை போசாக்கு நிலைமையில் உள்ளவர்கள் பெண்களும் குழந்தைகளுமாக காணப்படுகின்ற னர். இது அவசியம் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய சமூக கடமை.

எமது சமூகத்தின் எதிர்காலம் பெண்கள், குழந்தைகளின் போசாக்கு நிலைமையில் மிகவும் தங்கியுள்ளது.

எனவே, 35 இற்கும் மேற்பட்ட பெண்களை நோக்கிய ஆரோக்கிய சூழலுக்கான வேலைத்திட்டத்தை நாம் வகுத்துள்ளோம்.

இதனடிப்படையில் புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம் உட்பட்ட நோய்களினால் ஏற்படும் பாதிப்புக்களை தடுக்கும் நோக்குடன் நமது அமைச்சு சுறுசுறுப்படைகின்றது.

இன்று எமது சமூகத்திற்கு எது தேவை, எது தேவை இல்லை என்பதைப் பற்றிய தெளிவை நாம் ஏற்படுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

இன்றைய சூழ்நிலையில் எமது பெண்களுக்கு குடும்ப கட்டுப்பாடு அவசியமில்லை. இது இன்று சமுதாயத்திற்கு தேவையற்றது. மீளெழும் எமது இனத்திற்கு ஆரோக்கியமான பிள்ளைப்பேறுகளே அவசியம். இன்னொரு புறத்தில் இயற்கையால் ஏற்படக்கூடிய வறட்சி, எதிர்காலத்தில் நமது போசாக்கு நிலைமைகளில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

எனவே, வீட்டில் கழிவு நீரில் எல்லோரும் வீட்டுத்தோட்டம் செய்கிற முயற்சியி லும் ஈடுபட வேண்டுமென அவர் மேலும தெரிவித்தார்.

(அ-6-250)

# கெலம் மக்ரேயின் புத்தகம் வெளியீடு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சனல்-4 ஊடகத்தின் இயக்குநர் கெலம் மக்ரே, புத்தகம் ஒன்றை எழுதியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"அன்கரப்டட்ருத்" என பெயரிடப்பட்டுள்ள இந்தப் புத்கதம் 20 ஆயிரம் சொற்களைக் கொண்டு எழுதப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த புத்தகத்தில் இலங்கை இராணுவத்தினர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனிதவுரிமை கண்காணிப்பகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களினால் இலங்கைக்கு எதிராக வெளியிடப்பட்ட கருத்துக்கள் இந்த புத்தகததில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நூலின் 3 ஆயிரம் பிரதிகள் ஜெனீவாவில் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(எ-11)

# ஜனநாயக மக்கள் முன்னணியை மக்கள் ஆதரிக்க வேண்டும்

## வடமாகாணசபை உறுப்பினர் சித்தார்த்தன்

எம்மோடு இணைந்து தமிழ் மக்களுக்காக உழைக்கின்ற மிகப் பெரும் சக்திகளான மனோ கணேசன், குமரகுருபரன் போன்றவர்களுக்கும், ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் தமது ஆதரவினை வழங்குவதன்மூலம், தமிழரின் பிரதிநிதித்துவத்தை தெற்கிலும் நிறுவிக்கொள்ள முடியுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியினால் யாழ். நகரில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் ஜனநாயக மக்கள் முன்னணி மற்றைய கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டிருந்தாலும், நாம் அக்கட்சியின் உறுப்பினர்களுக்கு பகிரங்கமான ஒத்துழைப்பினை வழ்ங்கியிருந்தோம்.

இந்நிலையில், நடைபெறவுள்ள மேல் மாகாண சபைத் தேர்தலில் மனோ கணேசன் தலைமையிலான அணி களமிறங்குகிறது.

எங்களோடு இணைந்து தமிழ் மக்களுக்காக உழைக்கின்ற மிகப் பெரும் சக்தியாக ஜனநாயக மக்கள் முன்னணியும், மனோ கணேசன், குமரகுருபரன் போன்றவர்களும் இருக்கின்றார்கள்.

அத்தகைய உழைப்பு கட்சிகளுக்காக அல்லாமல் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கான உழைப்பாக இருந்ததை நாங்கள் பார்க்கின்றோம்.

எனவே, தார்மீக ரீதியாக தமிழ் பேசும் மக்கள் தங்கள் ஒத்துழைப்பினை அவர்களுக்கு வழங்க வேண்டும். அதன் மூலமே தமிழர்களின் அடையாளத்துடன் கூடிய பிரதிநிதித்துவத்தை தெற்கிலும் நிறுவிக்கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-6)

# பயங்கரவாதிகள் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் விழிப்புடன் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மாரில் நடைபெற்ற பிம்ஸ் டெக் மாநாட்டில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பயங்கரவாத அமைப்புக்கள் உலக அளவில் வலையமைப்புக்களை உருவாக்கிக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் முனைப்புக்களுக்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எந்த வகையில் எவ்வாறான கொள்கைகளுக்காக பயங்கரவாதம் முன்னெடுக்கப்பட்டாலும் அது உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத அனர்த்தங்களினால் மூன்று தசாப்த காலமாக நெருக்கடிகளை அனுபவித்த நாடு என்ற ரீதியில், இலங்கை பயங்கரவாதத்தினால் ஏற்படக் கூடிய மனித மற்றும் பொருளாதார இழப்புக்களை நன்கு அறிந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் பொருளாதாரம் பயங்கரவாதம் நிலவிய காலத்தில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியதாகத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிம்ஸ்டெக் அமைப்புடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட விரும்புவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

(அ-2)

# உள்நாட்டு பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகாண வேண்டும்

## தென்னாபிரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு தாங்களே தீர்வுகாண வேண்டுமென தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவின், சர்வதேச உறவுகள் மற்றும் கூட்டுறவு அமைச்சர் ஐ.நாவின் மனிதவுரிமைகள் மாநாட்டில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பான பிரச்சினைகளுக்கு சர்வதேச சமூகம் தீர்வைக் கண்டுபிடிக்க இந்த 25 ஆவது மனிதவுரிமைகள் மாநாடு மிக முக்கியமானதொன்றாக கருதப்படுகிறது.

எங்களுடைய சொந்தப் பிரச்சினைகளை கண்டறிந்து, அவற்றிற்கு நாமே தீர்வு காண வேண்டும். இதனையே இலங்கையும் கடைப்பிடிக்க வேண்டுமென தென்னாபீரிக்க மக்கள் விரும்புகின்றனர் என அவர் மேலும் தெரிவிததார்.

இலங்கையின் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கடந்த மாதம் ஆபிரிக்காவிற்கு விஜயம் செய்து, அந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததுடன், தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

739

## திருடனைக் கண்டுபிடிப்பது எப்படி?

..."ஆனால் இரண்டு நாட்களாக அவர்களை அடித்து, உதைத்தும் அவர்கள் தாங்கள் நிரபராதி என்றே சாதித்தனர். இரண்டு நாட்களாகியும் தன்னால் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்து, தங்கத்தை மீட்க முடியாமற் போனதை நினைத்து காவல் தலைவருக்கு பயம் உண்டாயிற்று. தன் தோல்வியை ஒப்புக்கொண்டால் சக்கரவர்த்தியின் கடும் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதால் அவர் கலங்கிப் பரிதவித்தார்.

திடீரென பீர்பாலின் ஞாபகம் வந்தது. "அட! இது முன்னமே ஏன் எனக்குத் தோன்றவில்லை? இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியவர் பீர்பால் ஒருவரே!" என்று சொல்லிக் கொண்டே, பொழுது விடிந்ததும் அவசரமாக பீர்பாலைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை பீர்பாலுக்கு விளக்கத் தொடங்கியவுடன், "இதைப்பற்றி எனக்கு ஏற்கெனவே தெரியும்" என்றார் பீர்பால்.

"நீங்கள்தான் எப்படியாவது குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும்!" என்று காவல் தலைவர் கெஞ்ச, பீர்பால் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு, காவல் தலைவரை நோக்கி, "எனக்கு மூன்று அடி நீளமுள்ள குச்சிகள் நான்கு தேவைப்படுகிறது. அவற்றை நீங்கள் ஏற்பாடு செய்து சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லுங்கள். நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் அங்கே வந்து அந்த நால்வரையும் சந்திக்கிறேன்" என்றார்.

பிறகு பீர்பால் சிறைச்சாலையை அடைந்த போது, காவல்தலைவர் குச்சிகளைக் கொடுத்து, அந்த நான்கு கைதிகளையும் அழைத்து வந்தார். வாடி, வதங்கிப் போய் அவர்கள் பீர்பால் முன் நின்றனர். அவர்களை நோக்கிய பீர்பால், "உங்கள் எசமானர் பஜ்ரிதாஸின் அலுமாரியிலிருந்து பத்துத் தங்கக் கட்டிகள் காணாமற் போய்விட்டன. உங்களில் ஒருவர் தான் திருடியிருக்க வேண்டும் என அவர் புகார் செய்து இருக்கிறார்" என்றார்.

உடனே, அவர்களில் ஒருவன், "அவர் உப்பைத் தின்று வளர்ந்தவன் நான்! ஒரு போதும் அவருக்கு துரோகம் நினைக்க







மாட்டேன்" என்றான். இரண்டாமவன், "நேர்மையை உயிராக மதிப்பவன் நான்! இத்தகைய ஈனச்செயலை கனவில்கூட என்னால் நினைக்க முடியாது" என்றான். "நான் இருபது ஆண்டுகளாக அவரிடம் வேலை செய்கிறேன். பணத்துக்கு ஆசைப்படுபவன் நானில்லை" என்றான் மூன்றாமவன். "நாயை விட நன்றி விசுவாசமானவன் நான்!" என்றான் நான்காமவன்.

"நீங்கள் சொல்வதை நம்புகிறேன். உங்களுக்காக இந்த மந்திரம் ஜெபித்த குச்சிகளைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று ஆளுக்கொன்றாகக் கொடுத்த பீர்பால், "யார் திருடினவனோ, அவன் கையிலுள்ள குச்சி இரவில் அவன் உறங்கும்போது மூன்று அங்குலம் வளர்ந்து விடும். உங்களை நாளை காலை சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டு பீர்பால் விடை பெற்றார்.

மறுநாள் பீர்பால் சிறைச்சாலைக்கு வந்ததும், அந்த நால்வரும் தங்களுடைய குச்சிகளுடன் வந்தனர். முதலில் ஒருவனுடைய குச்சியை வாங்கிக் கொண்ட பீர்பால் அதன் நீளத்தை சோதித்தார். பிறகு வரிசையாக அனைவரது குச்சியையும் பரிசோதித்தார். பரிசோதனை முடிந்ததும் மூன்றாவதாகக் குச்சியைத் தந்த ஆளை நோக்கி, "நீதான் தங்கத்தைத் திருடியவன்" என்றார் பீர்பால். அவன் உடனே அதை பலமாக மறுத்தான். ஆனால் திருப்பித் திருப்பிக் கேட்டபின் தான் திருடியதாக ஒப்புக் கொண்டான்.


"நீதான் திருடினாய் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. ஏனெனில், உண்மையிலேயே நீ திருடியிருந்ததால், உனக்குக் கொடுத்த மந்திரக்குச்சி மூன்று அங்குலம் அதிகமாக வளர்ந்து விடும் என்று நம்பிக் கொண்டு, நேற்றிரவு சிறையில் மூன்று அங்குல நீளத்துக்கு உன் குச்சியை வெட்டி விட்டாய். ஆனால் குச்சியில மந்திரமும் இல்லை, மாயமும் இல்லை?

இதோ பார்! உன்னுடையது மற்ற குச்சிகளை விடக் குட்டையாக இருக்கிறது" என்று குச்சியைக் காண்பித்தார்.

காவலர்கள் அவனிடமிருந்து ,பிறகு தங்கத்தை மீட்டு பஜ்ரிதாஸிடம் கொடுத்தனர். திருடியவன் சிறைக்கு அனுப்பப்பட்டான். பிறகு, காவல் தலைவர் தர்பாருக்கு வந்த அக்பரிடம் உண்மையான திருடனைக் கண்டு பிடிப்பதற்கு பீர்பால்தான் அவருக்கு உதவினார் என்பதைக் கூறினார். "அட! பீர்பால்! உனக்கு துப்பறியும் வேலை கூடத் தெரியும் என்று எனக்கு இதுநாள்வரை தெரியாதே!" என்று பாராட்டிய அக்பர், தன் கையிலிருந்த தங்க வளையம் ஒன்றைக் கழற்றி பீர்பாலுக்குப் பரிசாகத் தந்தார். (முற்றும்)

03.2014
06

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1447 - ஐந்தாம் நிக்கலாஸ் திருத்தந்தை ஆனார்.
- 1479 - கனாரி தீவுகளை போர்த்துக்கல் காஸ்டில் பேரரசுக்கு வழங்கியது.
- 1521 - பேர்டினண்ட் மகலன் குவாம் தீவை அடைந்தார்.
- 1788 - கைதிகளைக் குடியமர்த்தும் திட்டத்தில் முதற்படியாக முதலாவது தொகுதி கைதிகள் அடங்கிய கப்பல் நோர்போக் தீவை அடைந்தது.
- 1790 - மதுரை மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- 1836 - டெக்சாசில் அலாமோ நகரை மெக்சிக்கோ படைகள் தாக்கிக் கைப்பற்றினர்.
- 1869 - திமீத்ரி மென்டெலீவ் தனது முதலாவது ஆவர்த்தன அட்டவணையை சமர்ப்பித்தார்.
- 1940 - குளிர்காலப் போர்: பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் தற்காலிகப் போர் ஓய்வு ஒப்பந்தம் ஏற்பட்டது.
- 1945 - ருமேனியாவில் கம்யூனிச அரசு பதவிக்கு வந்தது.
- 1946 - வியட்நாம் போர்: ஹோ சி மின் பிரான்சுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி பிரான்ஸ் வியட்நாமை பிரெஞ்சு ஒன்றியம் மற்றும் இந்தோசீனக் கூட்டமைப்பினுள் தன்னாட்சி அதிகாரம் கொண்ட பகுதியாக ஏற்றுக் கொண்டது.
- 1953 - ஸ்டாலினின் மறைவையடுத்து சோவியத்தின் பிரதமராகவும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை செயலாளராகவும் கியோர்கி மாலென்கோவ் பதவியேற்றார்.
- 1957 - ஐக்கிய இராச்சியக் குடியேற்ற நாடுகளான கோல்ட் கோஸ்ட் மற்றும் பிரித்தானிய டொகோலாந்து ஆகியன இணைந்து கானா குடியரசு என்ற பெயரில் விடுதலை பெற்றன.
- 1964 - காசியஸ் கிளே தனது பெயரை அதிகார பூர்வமாக முகமது அலி என மாற்றிக் கொண்டார்.
- 1967 - திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது.
- 1975 - ஈரானும் ஈராக்கும் தமது எல்லை தொடர்பாக உடன்பாட்டிற்கு வந்தன.

### பிறப்புக்கள்

- 1475 - மைக்கலாஞ்சலோ புவோனரோட்டி, இத்தாலிய மறுமலர்ச்சிக் கால ஓவியர (இ. 1564)
- 1508 - ஹுமாயூன், இரண்டாவது மொகலாயப் பேரரசர் (இ. 1556)
- 1869 - சேர் ஜேம்ஸ் எமர்சன் டென்னெண்ட், எழுத்தாளர், பயணி, இலங்கைக்கான பிரித்தானிய காலனித்துவ செயலாளர் (பி. 1804)
- 1928 - காபிரியேல் மார்க்கெஸ், நோபல் பரிசு பெற்ற கொலம்பிய எழுத்தாளர்
- 1937 - வலன்டீனா தெரெஷ்கோவா, சோவியத் விண்வெளி வீரர், விண்ணுக்குச் சென்ற முதற் பெண்
- 1948 - ஸ்டீஃபன் ஷ்வார்ட்ஸ், அமெரிக்காவைச் சேர்ந்த பாடலாசிரியர், இசையமைப்பாளர்
- 1954 - ம. சா. அறிவுடைநம்பி, தமிழ்ப் பேராசிரியர் (இ. 2014)

### இறப்புக்கள

- 1888 - லூயிசா அல்கொட், அமெரிக்க நாவலாசிரியை (பி. 1832)
- 1973 - பெர்ல் பக், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மைக்கலாஞ்சலோ



மைக்கலாஞ்சலோ டி லொடோவிக்கோ புவோனரோட்டி சிமோனி, 1475 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம திகதி பிறந்தார். இவர் ஒரு இத்தாலிய மறுமலர்ச்சிக் கால ஓவியரும், சிற்பியும், கவிஞரும், கட்டடக்கலைஞருமாவார்.

மைக்கலாஞ்சலோ எனப் பொதுவாக அறியப்படும் இவரது கலைசார்ந்த பல் துறைத் திறமையின் உயர்ந்த தரம் காரணமாகச் சமகாலத்தவரான லியொனார்டோ டா வின்சியுடன் சேர்த்து இவரும் மறுமலர்ச்சிக் காலத் தந்தையெனக் கணிக்கப்படுகின்றார்.

மைக்கலாஞ்சலோவின் நீண்டகால வாழ்க்கையில், அவர் படைத்தவைகள் அனைத்தும் அவரது அதிசயக்கத்தக்க திறமைக்குச் சான்றாக அமைகின்றன. கடிதத் தொடர்புகள், வரைபடங்கள், நினைவுக் குறிப்புகள என இவர் எழுதிக் குவித்தவை ஏராளம். இவைகளையும் சேர்த்தால், 16 ஆம் நூற்றாண்டில் அதிகமாக ஆவணப்படுத்தப்பட்ட கலைஞர் இவரே எனலாம்.

மைக்கலாஞ்சலோ தனது 23ஆம் வயதில் செதுக்கிய புகழ் பெற்ற படைப்புக்களான, தாயும் சேயும் அல்லது பியேட்டா (Pieta), டேவிட் ஆகியவை 16ஆம் நூற்றாண்டின் இருபதுகளின் பிற்பகுதியிலும், முப்பதுகளின் ஆரம்பத்திலும் உருவாக்கப்பட்டவை.

ஆறு அடி உயரம் உடைய இத்தாலிய மொழியில் "Pietà" என்று அழைக்கப்படும் பியேட்டா சிலை, உலகப் புகழ்பெற்ற கலைஞர் மைக்கலாஞ்சலோ என்பவரால் செதுக்கப்பட்டு, வத்திக்கான் நகரிலுள்ள பேதுரு பெருங்கோவிலின் உள்ளே வைக்கப்பட்டுள்ள கலையழகுமிக்க பளிங்குச் சிலை ஆகும். இச்சிலை சிலுவையில் தொங்கி இறந்த இயேசுவை அவர்தம் அன்னை மரியா தம் மடியில் கிடத்தியிருப்பதுபோல் செதுக்கப்பட்டுள்ளது.

இவர் வாழ்ந்த காலத்திலேயே இவரது இரண்டு வாழ்க்கை வரலாறுகள் வெளியிடப்பட்டது. இவற்றில் ஒன்றை எழுதிய ஜோர்ஜியோ வசாரி (Giorgio Vasari), இவரை, மறுமலர்ச்சிக் காலச் சாதனைகள் அனைத்துக்கும் சிகரம் போன்றவர் எனப் புகழ்ந்துள்ளார்.

# சதுரகிரி சித்தர்கள்

### ஸ்ரீ சுந்தர மகாலிங்கர் தரிசனம்

இப்பொழுது நாம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சன்னிதியை நோக்கி முன்னேறுகிறோம். வழியெங்கும் துணிப் பந்தல் கடைகள் வரவேற்க குடுகுடுவென குதித்து ஓடும் மற்றொரு ஓடையில் கால் நனைத்தபடி திரும்பிப் பார்க்கிறோம்.

நாங்கள் கருப்பண்ண சாமி கோயிலில் பார்த்த அதே வெள்ளை நிற நாய் எங்களைத் திரும்பிப் பார்த்து வழியிலேயே நின்றிருந்தது. இவ்வளவு தூரம் எங்களைப் பின்தொடர்ந்து வந்தது ஆச்சரியமாக இருந்தது. பிலாவடிக் கருப்பரும், தாணிப்பாறை கருப்பரும் எங்களைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்தது புரிந்தது.

நீரோடையில் கால் நனைத்ததும் காலின் வலி தற்காலிகமாகக் குறைந்தது. இன்னும் சற்று நேரம் அந்த ஜில்லில் வைத்திருக்க ஆசைதான். ஆனால் பின்னால் வரும் பக்தர்களுக்கு வழிவிட வேண்டுமே, நீரோடையை அடுத்து உள்ள படிக்கட்டுகளில் கால் வைக்கின்றோம். கால் வெறுமையாக இருப்பது போல் ஓர் உணர்வு.

### சிவசித்தர்கள் கங்கை தீர்த்த ஊற்று

எங்களுடன் துணைக்கு வந்த பைரவருக்கு நன்றி சொல்லியவாறே படிக்கட்டுகளைத் தொடருகிறோம். படியின் இரண்டு பக்கமும் தாகம் தீர்க்கத் தண்ணீர்க் குழாய்கள் அணிவகுத்துக் காட்சி தருகின்றன. கீழே ஓடிக் கொண்டிருக்கும் ஓடையில் கால் நனைத்த சுகத்தை மறுபடியும் அனுபவிக்க ஆசை. தண்ணீர் வருமா? வராதா! என்ற சந்தேகத்துடனே குழாயைத் திறக்கிறேன்.

அட! நம்மவூர் குழாய்களில் வருவதுபோல் காற்று வரவில்லை. நிஜமாலுமே தண்ணீர் குளிர் அருவியாய் கொட்டியது ஆச்சரியம். குடித்துப் பார்க்கிறேன். அருவி நீரின் சுவை அமுதமாய் இருந்தது. அப்படியே முகத்துக்கும் கொஞ்சம் குளிர் ஒற்றடம்.


சுந்தரமகாலிங்கர் கோயில் நுழைவாயில்

பெரிய பெரிய தர்மங்களெல்லாம் செய்து பெரும் புண்ணியம் பெறுவதைவிட தவித்த வாய்க்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்துத் தேடிக் கொள்ளும் புண்ணியம்தான் தலைசிறந்தது என்று சொல்லுவார்கள். அப்படி திருநாவுக்கரசர் பெயரால் திங்களூரில் தண்ணீர் பந்தல் அமைத்த புண்ணியவான் யார் என்று நிமிர்ந்து பார்க்கையில்; எதிரே மதுரை முனிச்சாலை த.பூமித்தையா-சீனியம்மாள் நினைவாக பூ.பொன்ராஜ குடும்பத்தினர் பெயர் கல்வெட்டாய் மின்னுகிறது.

அன்று சதுரகிரி சித்தர்களாக சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட இந்த சிவசித்தர்களின் கங்கை தீர்த்த ஊற்று இன்று மலையேறி வரும் அவரின் பக்தர்களின் தாகத்தையும் தீர்த்துக் கொண்டிருக்கிறது.

குடிநீரை அளித்தவர் பக்கத்திலேயே அந்த நீரின் வரலாற்றையும் கல்வெட்டுக் களிலே பலரும் அறியும் வண்ணம் பதித்து இன்னொரு புண்ணியத்தையும் தேடிக் கொண்டிருக்கிறார்.

### புண்ணிய கங்கை ஊற்றுக் கிணறு

இந்த ஊற்றிலிருந்துதான் காலங்காலமாக தீர்த்தம் எடுத்து எல்லாம் வல்ல சித்தர்களுக்கு எல்லாம் சித்தராம் எம்பிரான் சுந்தரமகாலிங்கத்திற்கும், சுந்தரமூர்த்திக்கும் அபிஷேகம் செய்யப்படுகிறது. இந்தப் புண்ணிய ஊற்றில் சிவனும், சித்தர்களும் குடி கொண்டுள்ளதால் இந்த நீர் மருத்துவ குணமும், புனிதத் தன்மையும், மகத்துவமும் கொண்டது. இந்த நீரைப் பருகுவதால்

**ஆன்மீகம் 53**

உடல் பிணியும், மன நோய்களும் தீரும் என்பது ஐதீகம். இந்த நீரை வீடு, தொழில் நடைபெறும் இடங்களில் தெளிப்பதால் எல்லாத் தோஷங்களும் தீரும்.

இந்தப் புனித நீரை எல்லோரும் பருகி உடல், மன ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் ஊற்றை ஆழப்படுத்தி, செம்மைப்படுத்தி, நீரை தண்ணீர் நிலைத் தொட்டியில் தேக்கி, மலை முழுவதும் குழாய் மூலமாக எல்லோருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரலாற்றைப் படித்துவிட்டு அந்தப் புண்ணிய கங்கை ஊற்றுக் கிணற்றை படிக்கட்டுகளிலிருந்தே எட்டிப் பார்க்கிறேன். பாதையின் வலப் புறத்தில் உள்ள பள்ளத்தாக்கில் பெரியதொரு தகர ஷெட்டுக்குப் பக்கத்தில் நீரேற்றும் மோட்டாருடன் கூடிய பெரிய கிணறு தென்படுகிறது.

அந்தப் புண்ணிய ஊற்றை வணங்கி விட்டு மேலேறத் தொடங்குகிறோம்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



65

...ஒரு வாரம்கூட ஆகவில்லை. பத்திரிகையில் பாகவதர் குடும்பத்துக்கு சொந்த நிதியிலிருந்து ஒரு இலட்ச ரூபாய் உதவித் தொகை கொடுத்ததாகவும், அவர் வீடு இருந்த திருச்சி தெருவுக்கும் ஒரு கலை அரங்குக்கும் பாகவதரின் பெயர் சூட்டியதாகவும் படித்தேன். செம்மலே முன்நின்று செய்திருக்கிறார். மேடையில் செம்மலுடன் பாகவதர் குடும்பம் அமர்ந்து இருக்கும் படமும் அச்சிடப் பட்டிருந்தது. சொல்லாமல் செய்வது அவர் பழக்கமானதால், எனக்கு இந்த உதவி பெரிதாகப் படவில்லை. செம்மல் வந்ததும் வழக்கம் போல் போய் பார்த்தேன்.

"என்னய்யா... பத்திரிகை பார்த்தீரா? பாகவதர் விஷயம் பார்த்தீரா?" என்றார்.

"ஆமாம்" என்றேன்.

"இப்ப உமக்கு திருப்தியா?" என்று கேட்டார்.

"என் திருப்தி இதிலே என்ன இருக்குது?" என்றதும் ரவீந்திரன் கால மாறுதல் என்னன்னு அந்தம்மா புரிஞ்சுக் கிடத்தான் நிறுத்தி வச்சேன். இரண்டு நாட்கள்தான் நின்னாங்க. அதுக்கே இவ்வளவு வேதனைப்பட்டாங்களே. நான் அவுங்க வீட்டு வாசல்லே எத்தனை நாள் நின்னு இருப்பேன் தெரியுமா? அசோகுமாரலே பாகவதர் நண்பனா வர்ற வேஷத்தை எனக்கு கொடுக்க விடாம, பொண்டாட்டியும் புருஷனும் ராஜா சந்திரசேகர் சார்கிட்டே தடுத்தாங்க. அங்கேயும் சின்னவங்க- பெரியவங்க இருந்தாங்க.


எம்.ஜி.ஆரும் அவரின் அண்ணன் எம்.ஜி.சக்கரபாணியின் மகளான சத்தியபாமாவும் (அரச கட்டளை பட தயாரிப்பாளர்)

சந்திரசேகர் பெரியவர் [illegible] சின்னவர். அந்த இரண்டு பேர் தயவிலே கிடச்ச ரோல்தான் அது. இன்னிக்கு இருக்கிற உயர்விலே, மத்தவங்களைத் தாழ்வா நெனச்சுடக் கூடாதய்யா" என்றார்.

### பச்சை...

இன்ஜக்ஷன் முறையை மேலை நாட்டினர் கண்டு பிடிப்பதற்கு முன் நம் நாட்டினர் கண்டு பிடித்த முறை பச்சை குத்துதல். மருந்து நேரடியாக இரத்தத்தோடு கலந்து பல நோய்களை நீக்க இதைச் சொன்னவர் அகத்தியர். தமிழுக்கு மட்டுமல்ல, வைத்திய சாஸ்திரத்துக்கும் சில சித்து முறைகளுக்கும் அவர் ஆசான்.

அதையும் கலையோடு கலக்கும் இம்முறையில் அழகாக சில வடிவங்களையும் சித்திரங்களையும் அமைத்தனர். அந்தக் கால யுத்தங்களில், வீரர்கள் தலைகள்தான் சிதைக்கப்படும். தலை போனால் அந்த உடல் யாருடையது என விளங்காது என்பதற்காக கையில் பச்சையில் பெயர்களை குத்திக் கொள்ள சட்டமே இருந்தது.

செம்மல் கட்சி அமைத்ததும் கட்சி சின்னமாக துண்டு, பேட்ஜ், வேட்டி தேவையில்லை. பச்சை குத்திக் கொள்ளட்டும். அண்ணாவின் உருவே இருக்கட்டும். ஒவ்வொருவர் கையிலும் அவர் இருந்தால் அவரது எண்ணம் வரும். அவரது தூய்மை நினைவுக்கு வரும். அந்தக் கைகள் களங்கமற்று இருக்கும் என்று முதலில், தன் கையில் பச்சை குத்திக் கொண்டு மற்றவருக்கு வழிகாட்டினார்.

இன்பக் கனவு நாடகத்தில் ஒரு வசனம் இருக்கும். தொண்டர்களுக்கு தலைவன் முன் நின்றும் பிள்ளைகளுக்கு ஆசிரியர் பின்நின்றும் வழிகாட்டிச் செல்ல வேண்டும். என்று. அதை இதில் செம்மல் முன்னின்று பச்சை குத்தி வழிகாட்ட, மற்றவர் இலட்சக் கணக்கில் குத்திக் கொண்டனர்.

இந்த பச்சை குத்து நிகழ்ச்சியில், என் நெஞ்சில் குத்திய ஒரு பச்சையும் நினைவுக்கு வருகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட கட்சி கூட்டமொன்றை நடத்துகிறது மு.காங்கிரஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி விசேட கூட்டமொன்றை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இன்று வியாழக்கிழமை கட்சியின் அதி உயர் பீடத்தினர் இந்தக் கூட்டத்தை நடத்த உள்ளனர்.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

கட்சி மற்றும் கட்சித் தலைவர் எதிர்நோக்கி வரும் பிச்சினைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தின் போது விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது இலங்கைக்கு எதிராக செயற்படுமாறு அமைச்சர் ஹக்கீம், சவுதி அரேபியா மற்றும் குவைத் போன்ற நாடுகளிடம் கோரியதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச அமைச் சரவைக் கூட்டத்தில் குற்றம் சுமத்தியிருந்தார்.

சிங்களக் கட்சிகள்முஸ்லிம் காங்கிரஸிற்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாக, கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம் களுக்கு பல்வேறு வழிகளில் நெருக் கடிகளை ஏற்படுத்தியதாகவும், அனைத்து தரப்பினரும் ஜெனீவா சென்று தங்களது குறைகளை கூறி வருவதாகவும், முஸ்லிம்களை எவரும் பிரதிநிதித்துவம் செய்வ தில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(அ-2)



இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் நொபுகிற்ரோகொபோ நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை சந்தித்து வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினர். இதன்போது அருகில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் இருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

# மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்

## தென்னாபிரிக்காவின் பேராயர் வலியுறுத்து

இலங்கையில், இறுதிப்போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று தென்னாபிரிக்காவின் பேராயர் டெஸ் மனடுட்டு கோரிக்கை விடுத்துள்ளார்

ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் பேரவைக்கு அவர் உட்பட்ட பல மனித உரிமை நடவடிக்கையாளர்கள் கையெழுத்திட்டு இந்தக் கோரிக்கையை அனுப்பிவைத்துள்ளனர்.

அதில் இலங்கையின் இறுதிப் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளுக்காக ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும என்று கோரப்பட்டுள்ளது.

அதுவே இலங்கையில் நல்லிணக்கத்தையும் நீதியையும் ஏற்படுத்தும் என்று கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் போர் முடிந்துவிட்டதாக கூறப்படுகின்ற போதும் இன்னும் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படவில்லை. ஜனநாயக பண்புகள் மறுக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தநிலையில் போர்க்காலத்தை காட்டிலும் நிலைமை மோசமடைந்துள்ளதாக டுட்டு குழுவினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதனைவிட இலங்கையில மனித உரிமைகள் தொடர்பில் திட்டமிட்ட புறக்கணிப்புகள் இடம்பெறுகின்றன.

இந்நிலையில்இந்த நூற்றாண்டில் இரண்டு தரப்புக்களும் பாரிய மனித உரிமை மீறல்களில ஈடுபட்டுளளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே சர்வதேச விசாரணை பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே இலங்கையில் இறுதி சமாதானத்தை எய்தமுடியும் என்றும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தில் தென்னாபிரிக்காவின் பேராயர் டெஸ்மன் டுட்டு, தென்னாபிரிக்காவின் மனிதவுரிமைகள் நிதிய பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, மன்னார் ஆயர் ஜோசப் இராயப்பு ஆண்டகை, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்சம்பந்தன், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தென்னாபிரிக்காவின் பொதுமக்கள் அமைப்பின் செயலாளர் டெனி ஸ்ரீஸ்கந்தராஜா, மலேசியாவின் மனிதவுரிமைகள் ஆர்வலர் இரானே பெர்ணாண்டஸ், இலங்கை ஜனநாயகம் மற்றும் நாட்டில் இருந்து வெளியேறியுள்ள சிங்கள ஊடகவியலாளர் பாசன அபேவர்த்தன, உகண்டாவின் சிறுவர் நல திட்ட பணிப்பாளர் மாக்கி டக்ரி, பிரேசிலின் மனிதவுரிமையாளர் பிலேவியா பியோவேசன் உட்பட மேலும் 28 மனிதவுரிமை நடவடிக்கையாளர்கள் இந்த கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## புகைப்படம் எடுப்பதற்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்பிரதேசசெயலகத்தினால் ஆட்களை பதிவு செய்யும் திணைக்கழத்தால் 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்காக புகைப்படங்கள் எடுப்பதற்கு பதிவு செய்வதற்காக புகைப்பட நிலையங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இதற்கான பதிவு செய்யும் விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் புகைப்பட நிலையங்களால் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள், மாதிரி விண்ணப்பபடிவம் என்பவற்றை அலுவலக நேரத்தில் நல்லூர் பிரதேச செயலக அடையாள அட்டைப் பிரிவில் பார்வையிடலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வாக்கெடுப்புக்கு முன்னர் இந்தியா தனது நிலைப்பாட்டை அறிவிக்கும்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னர் இந்தியா தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் இந்த உறுதிமொழியை இந்தியா, இலங்கைக்கு வழங்கியுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் இடம்பெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில்பங்கேற்ற பின்னர் நாடு திரும்பிய அவர் செய்தியாளர்களிடம் இந்தக்கருத்தை வெளியிட் டுள்ளார்.

இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் நேற்றுமுன்தினம் மியன்மாரில் சந்தித்து பேச்சுவாத்தை நடத்தினர். இதன்போது ஜெனீவாபிரேரணை உட்பட்ட விடயங்களும் பேசப்படடன.

இந் நிலையில் ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையை இந்தியா இன்னும் உரிய வகையிலவாசித்தறியவில்லை என்று மன் மோகன சிங் மகிந்தவிடம் தெரிவித்தார்.

வடக்கில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் முடிவடைந்தும் மேலும படையினரை விலக்கிக் கொள்வது குறித்து மஹிந்த ராஜபக்ச இதன்போது இந்திய பிரதமரிடம் உறுதிவழாங்கியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்காக தமிழ் கட்சிகள் இலங்கையின் நாடாளுமன்ற குழுவில் பங்கேற்பதற்கு இந்தியா உதவ வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச இந்திய பிரதமரிடம்கேட்டுக்கொண்டார் எனினும் தாம் வடக்குக்கு சென்றிருந்த போதும் ஒருவராவது இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவிக்கவில்லை என் பதை இதன போது மஹிந்த ராஜபக்சவிடம் தாம் சுட்டிககாட்டியதாக குர்ஷித செய்தியாளர் களிடம் தெரிவித்தார்.

இலங்கையர்களும் அதேபோல தமிழ் நாட்டில் உள்ளவர்களும் தமது நண்பர்கள். எனினும் தமிழகத்தில் உள்ளவர்கள் மத்தியில் வடக்கு மக்கள் தொடர்பில் உணர்வுகள் இருப்பதை தாம் ராஜபக்சவிடம் சுட்டிக்காடடியதாக குர்ஸித் கூறினார்.

எவருக்கும் தமது அரசியல் உரிமைகள் குறித்து பேசமுடியும் செயற்பட முடியும். எனினும் இதன்போது தேசிய நலன் கருத்திற்கொள்ளப்பட வேண் டியது அவசியம் என்று குர்சித் குறிப்பிட்டார்.(அ-2)

## பண்டிதர் தேர்வுக்காக விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், சித்தாந்த பண்டிதர் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவங்களை சைவபரிபாலன சபையில் (இல.66 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நேரிலோ அல்லது கடிதமூலமோ பெற்று எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

பரீட்சைகள் ஏப்ரல் 18, 19, 20 ஆம் திகதிகளில் சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறும் என சபையின் பரீட்சை செயலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

## இனம்தெரியாத பொருட்களை தொடவேண்டாம்

-இராணுவம்-

போர் இடம்பெற்ற வலயங்களில் இனந்தெரியாத பொருட்களை தொட வேண்டாம் என இராணுவததினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான அல்லது இன்ந்தெரியாத பொருட்களை கண்டால் உடனடியாக அது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்க வேண்டும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் காணப்படும் இவ்வாறான பொருட்களை தொடக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் அண்மையில் இவ்வாறான மர்மப் பொருள் ஒன்றை எடுத்த போது வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்று அதில் ஐந்து பேர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# உக்ரைனில் இலங்கையர்கள் பாதுகாப்பாகவுள்ளனர்

## வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

உக்ரைனில் வசிக்கும் இலங்கையர்கள் அந்த நாட்டில் வன்முறையால் பாதிக்கப்படவில்லையென வெளிவிவகார அமைச்சு அறிவிதுள்ளது.

மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக அங்கிருக்கும் இலங்கையர்கள் குறித்தும், உக்ரைனின் நிலைமைகள் குறித்தும் தொடர்ந்து தகவல்களைப் பெற்ற வண்ணம் உள்ளதாக அமைச்சு உக்ரேனில் படிக்கும் மாணவர்கள் 13 பேரை வெளி விவகார அமைச்சு அங்கிருந்து அழைத்துவர நடவடிக்கை எடுத்துள்ளதாக சில ஊடகங்கள், வெளியிட்ட செய்திகள் உண்மையில்லை.

அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் 13 பேரும் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களை நாட்டுக்கு அழைத்துவர அவசியமில்லை.

அதேவேளை, பல இந்திய மாணவர்கள் அதே பல்கலைக்கழகத்தில் படிப்பதாகவும் அவர்கள் வெளியேறவில்லை எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# மலேரியாவால் பலியானவர்களின் எலும்புகளே மன்னாரில் மீட்பு

## இப்படி கூறுகிறது சிங்கள ஊடகம்

மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மலேரியா காய்ச்சலினால் உயிரிழந்தவர்களுடையவை என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் மன்னாரில் பாரியளவில் மனித எலும்புக் கூடுகளும் மண்டையோடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மனித உடல்எச்சங்கள் 1936, 1937ஆம் ஆண்டுகளில் மலேரியா காய்ச்சலினால் உயிரிழந்தவர்களது என சுகாதார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் மலேரியாவினால் ஐந்து இலட்சம் பேர் பாதிக்கப்பட்டதுடன் 80ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

மன்னார், வவுனியா, அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் மலேரியாவினால் அதிகளவானவர்கள் கொல்லப்பட்டனர்.

மன்னார் செட்டிகுளம் பகுதியில் மலேரியாவினால் உயிரிழந்தவர்களை புதைப்பதற்கு கூட எவரும எஞ்சியிருக்கவில்லை.

அண்மையில் மன்னாரில் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் மலேரியா நோயினால் உயிரிழந்தவரகளது சடலங்களாக இருக்கக் கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல், கற்பித்தல் செயன்முறையில் கற்றல் பாங்கில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

கற்றல், கற்பித்தல் கொண்ட முறையில் கற்போனே முக்கிய முகவராவார். கற்போனின் கற்றல் பாங்கினை கற்போனும் கற்பிப்போனும் முறையாகத் தெரிந்திருத்தலின் மூலமே கற்போனின் கற்றலை வினைத்திறனுள்ளதாக்க முடியும். கற்போன் தனது கற்றலை புலன்களினூடாகவே செயற்படுத்துகின்றான்.

எனவே, கற்போனும் கற்பிப்போனும் கற்றலுடன் தொடர்புடைய புலன்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருத்தலின் ஊடாகவே கற்போனுக்கான வழிகாட்டலையும் கற்பிப்போன் கற்றலுக்கு கையாள வேண்டிய உபாயங்களையும் முறையாக கையாள முடியும்.

கற்றல், கற்பித்தல் செயன்முறையை உள்ளீடு, செயன்முறை வெளியீடு ஆகிய மட்டங்களில் நோக்க முடியும். உள்ளீடுகள் என்ற வகையில் பௌதீக உள்ளீடுகளும் மனித உள்ளீடுகளும் இடப்படுகின்றன. உள்ளீடுகளின் தரமும் அவற்றை பயன்படுத்துவதற்கான திறனும் கற்றல், கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பௌதீக உள்ளீடுகள் என்ற வகையில் பாடப் புத்தகங்கள், ஆசிரியர் அறிவுரைக்கு வழிகாட்டிகள், கற்றல், கற்பித்தல் மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்படும் வகுப்பறைச் சாதனங்கள் என்பவற்கைக் குறிப்பிடலாம்.

கற்போனை கவனத்தில் கொண்டு கற்றல், கற்பித்தல் சாதனங்கள் ஆக்கப்படுமாயின் கற்போனின் கற்றல் மேம்பாட்டையும் இங்கு வகுப்பறைக் கற்பித்தலின் பிரதான கற்றல், கற்பித்தல் சாதனமாக விளங்குவது கற்போனுக்கு வழங்கப்படும் பாடப் புத்தகங்கள் ஆகும். பாடப் புத்தக ஆக்கத்தில் ஈடுபடுவோர் வயது முதிர்ச்சி, அதன் உள்ளடக்கம், உபாயங்கள் பல்வகைப்பட்டவை கற்போனுக்கு வழங்கப்படும்.

புத்தகம் பல்வகைமையைக் கொண்டிருத்தல், புத்தக ஆக்கத்திற்கு பயன்படுத்தப்படும் வர்ணங்கள், கற்போனின் முன்னைய அறிவுடன் தொடர்புபடுத்தல் ஆகிய அம்சங்களில் கவனம் செலுத்துதல் முக்கியமாகும்.

வகுப்பறை என்பது பல்வகைப்பட்ட எண்ணங்களையும் திறன்களையும் மனப்பாங்குகளையும் கொண்ட ஆட்தொகுதியினரைக் கொண்ட இடமாகும். இங்கு இருப்பவர்கள் மூலம் அடையவேண்டும் என எதிர்பார்க்கப்படும் விளைவுகள் மூலம் பல்வகை ஆற்றல் கொண்ட மனிதர்களை உருவாக்குவதன் மூலம் மனித சமூகத்தின் எதிர்காலத் தேவையை நிறைவு செய்வதாகும். சாதாரண வகுப்பறை ஒன்றை தொழிற்சாலை ஒன்றுடன் ஒப்பிடும் போது வகுப்பறைக்கும் தொழிற்சாலைக்கும் இடையிலான வேறுபாடுகளை இனம் கண்டு கொள்ளலாம்.

சவர்க்காரம் செய்யும் தொழிற்சாலை ஒன்றில் ஒரே வகையான உள்ளீடுகளை இட்டு செயன்முறைக்கு உட்படுத்தும்போது விளைவானது ஒரே மாதிரி அமையும். இங்கு உற்பத்தியாளன் ஆயிரம் சவர்க்காரக் கட்டிகளை உற்பத்தி செய்வதாகக் கொள்ளின் உள்ளீடுகளின் சமநிலைத் தன்மையால் உற்பத்தியாகும் சவர்க்காரக்கட்டிகளின் தன்மை ஏக பரிமாண நிலையில் காணப்படும். ஆனால், வகுப்பறை ஒன்று




அத்தகை நிலை ஒன்றில் இருந்து முற்றாக வேறுபட்டதாகும். வகுப்பறை ஒன்றின் உள்ளீடுகள் ஏகத்தன்மை கொண்டவை. ஆயினும் ஆளணியினரின் பல்வகைத் தன்மையால் விளைவு ஏக நிலையில் காணப்படுவதில்லை. சவர்க்கார உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் முறை ஏக நிலையாக இருக்கும் போது வகுப்பறைக் கற்பித்தலும் ஏக நிலையாக இருப்பின் சவர்க்கார ஆக்கம் போல வகுப்பறை ஆக்கம் இருப்பதில்லை. காரணம் வகுப்பறை என்பது மனிதர்களைக் கொண்ட இடமாகும்.

மனிதர்கள், மனிதர் என்ற பெயரால் ஏகத்தன்மை கொண்டிருப்பினும் மனிதர்களின் உள்ளுணர்வால், ஆற்றலால், திறன்களால் வேறுபாடுகளைக் கொண்டவர்கள். இவர்களின் பல்வகைமைக்கு பொருத்தமான கற்றல் இயல்புகள் காணப்படுகின்றன. அவற்றை முறையாக இனம்கண்டு கற்பித்தலே கற்றல், கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்கு வழிகாட்டும்.

### நவீன தொழில்நுட்பமும் கற்போனை இனம் காணலும்

கற்போனுக்கு பொருத்தமானவற்றை வழங்கல் என்பது கற்பிப்போனின் பணியாகும். வைத்தியர் ஒருவருடன் ஆசிரியர் பணியை ஒப்பு நோக்கல் பொருத்தமுடையது என நினைக்கின்றேன். மருத்துவ உலகம் ஒன்றிணைந்த புதிய நுட்பங்களை நோயைக் கண்டு பிடிப்பதற்காக பயன்படுத்துகின்றது. சிறுநீர், இரத்தம் போன்றவற்றை ஆய்வுகூடத்தில் ஆய்வு செய்து அவற்றின் குறை, நிறைகளை அறிகின்றனர். X-ray, Scanning போன்றவற்றை பயன்படுத்தி உடல் உறுப்புக்களை பார்க்கின்றனர்.

பொருத்தமான போது மருந்துகளைக் கொடுத்து நோய் நீக்குகின்றனர். தேவையான போது உடலைக் கீறி மருத்துவம் செய்கின்றனர். இன்னும் சில சந்தர்ப்பங்களில் உடல் உறுப்புக்களை மாற்றீடு செய்கின்றனர்.

ஆனால், கற்றல், கற்பித்தல் செயன்முறையில் மருத்துவத்தைப் போன்ற கருவிகள், மருந்துகள் இல்லை. ஆசிரியர் நோய்க்கு மருந்து கொடுப்பார். சிலவேளைகளில் நோய் மாறலாம் அல்லது நோய் மேலும் வலுப்பெறலாம். எனவே, மருத்துவர் பணி ஆசிரியர் பணியுடன் ஒப்பு நோக்கும்போது ஆசிரியர் பணி சிக்கலானது.

### உணர்வுசார் கற்றல் முறைமை

சமூக இடைவினையானது உணர்வுகளைத் தூண்ட கற்றலை விளைவிக்கின்றது. இங்கு கற்போனின் கற்றல் சூழல் பாதுகாப்பானதாக அமைகின்றபோது, உணர்வுகளின் அடிப்படையில் கற்றல் நிகழ்கின்றது. கற்போனின் உணர்வுசார் தேவைகள் நிறைவு செய்யும்போது மூளையானது நேர்கணிய உணர்வுகளை பிறப்பிக்கின்றது. கற்போன் குழுவாகச் செயற்படும்போது அவர்களுக்கிடையேயான நேர்கணிய உணர்வுசார் திறன்களால் கற்றல் பொருள் பொதிந்ததாக அமைகின்றது.

உணர்வுசார் கற்றல் முறைமைக்கு பாடசாலையின் அமைப்பு பின்வரும் வகையில் அமைந்திருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- மாணவர்கள் எல்லோரும் கற்கும் ஆற்றல் கொண்டுள்ளனர் என்பதை கற்றல், கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடும் ஆளணியினர் ஏற்றுக் கொள்ளல்.
- மாணவர்களின் பல்வகைமையை ஏற்றுக்கொள்ளல்.
- மாணவர்களின் கற்றல் வாழ்க்கையுடன் ஒன்றிணைக்கப்பட்டிருத்தல்.
- மாணவர்களின் கற்றல் வெளிப்பாட்டை, பல்வகைமையில் வெளிக்காட்ட வாய்ப்பு அளித்தல்.
- மாணவர்களின் மட்டத்துக்குப் பொருத்தமான சவால்களை வழங்குதல்.
- வகுப்பறைகளின் நிலை, உறுதுணையாக, உள்ளடக்கப்பட்டதாக எதிர்வுகூறப்பட்டதாக அமைதல்.
- ஆசிரியரும் மாணவரும் வெற்றியைக் கொண்டாடுதல்.
- அகரீதியாக அதிருப்தியைப் பெற்றுக்கொள்ளல்.

இலக்கு நோக்கிய கற்றலின் ஊடாக, கற்போனின் அகத் திருப்தியை உருவாக்கல். உணர்வுசார் கற்கையில், வகுப்பறையானது நேர் கணியங்களின் நிலையைக் கொண்டிருப்பதோடு கற்போனிடம் கற்றல் தொடர்பான நம்பிக்கையையும் உருவாக்கவேண்டும்.

கற்போனின் கற்றலுக்குப் பொருத்தமான வகையில் கற்றலுக்கான சவால்களை உருவாக்குவதோடு கற்போன் விடும் தவறுகளை அடையாளங்கண்டு, கற்றலை முன்னெடுக்கக்கூடிய வகையில் பின்னூட்டலை வழங்க வேண்டும். கற்போனுக்கு வழங்கும் ஒப்படைகள் ஏகத் தன்மையை விடுத்து பல்வகைத்தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். பல்வகைத் தன்மையை ஒப்படை கொண்டிருக்கும் போது ஒப்படையானது சவால்கள் நிறைந்ததாக அமையும்.

இங்கு ஆசிரியர் மென்ரராகச் (Mentor) செயற்படுவார். மென்ரர் என்பவர் கற்போனில் அதிகளவு அக்கறை கொண்டவராகவும் கற்போனின் உடல், உளத் தேவைகளை நிறைவு செய்பவராகவும் இயங்குவார்.

### சமூகக் கற்கை முறைமை

மனித வாழ்வின் ஆரம்பம் சமூக உறவாடலில் தங்கி நிற்கின்றது. பிள்ளை தங்கும் போது, பிள்ளையின் சமூக உறவு சோடி முறையில் நிகழ்கின்றது. காலப்போக்கில், சோடி முறை, குழு முறையாக மாற்றம் பெறுகின்றது. பிள்ளை குழுவாக இயங்கும்போதுதான் அந்தக் குழுவின் அங்கத்தவர் என்பதோடு தான் வகிக்கும் குழுவில் நன்கு உள்வாங்கப்பட்டுள்ளார் என்பதையும் உணர வேண்டும். கற்போன் வசதியாகவும் நம்பிக்கையோடும் மதிப்போடும் இணைப்போடும் இருக்கும்போது அக ரீதியான உணர்வைப் பெறுவார். இதுவே வகுப்பறையில் அதிகம் வேண்டப்படுவதாகும். வகுப்பறையானது கற்றலுக்குப் பொருத்தமான ஆற்றலைக் கொண்டிருக்கும் போது கற்றல் மேம்பாடடையும். குழுவின் உறவுமுறை வெளிப்படுத்தப்படும்போது கற்றலுக்குப் பொருத்தமான வகையில் மாணவர்களின் விழுமியமும் விருத்தியடையும்.

கற்போன் குழுக்களினால் முற்றாக ஏற்றுக்கொள்ளப்படும் போது தகைப்பு நீங்கி, கற்றல் மேம்பாட்டையும் ஆசிரியர்கள் கற்போரைக் கொண்ட குழு நிலையை வகுப்பறையில் உருவாக்கும் போது ஒவ்வொரு கற்போனும் தான் அக்குழுவைச் சார்ந்தவன் என்ற அக உணர்வையும் அதிகரிக்கலாம். எனவே, ஆசிரியர் குழு இவை தொடர்பாகப் பின்வரும் மனப்பாங்குகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கற்போர் அனைவரையும் மதித்தல்
- கற்போனின் நம்பிக்கையையும் உணர்வுகளையும் அடையாளப்படுத்தல்
- உண்மை அலகைக் கற்பதற்கு பல்வகைப் புலன்சார் சூழலை உருவாக்கல்

மாணவர்களின் கூட்டுக் கற்றற்சூழல் முக்கியமானது. இதன் வழி கற்போனின் கல்வி இலக்கு, சமூகத் திறனும் வளர்க்கப்படுதல் அவசியமாகின்றது.

சமூகக் கற்றலில் யாரும் விலகி இருத்தல் கூடாது. இங்கு அனைவரும் சமமானவர் என்ற உணர்வு கற்போன் மத்தியில் உருவாக வேண்டும். இதனால் ஒருவன்ரை ஒருவர் மதித்து நடக்கும் பாங்கு உருவாகும். ஒருவரை ஒருவர் மதித்து நடப்பதால், ஜனநாயக விழுமியங்கள் தோற்றம் பெறும். மேலும் சமூகக் கற்கைமுறை நடைமுறைப்படுத்தப்படுவதால் கற்போருக்கிடையே இடைவினை உருவாகும். இதனால் ஒருவரின் கருத்தை இன்னொருவர் ஏற்கவும் ஜனநாயக அடிப்படையில் மறுக்கவும் இயலுமாகும்.

இன்றைய சமூக அமைப்பில் ஆட்களுக்கிடையிலான தொடர்பு முக்கியமாகும். சமூகக் கற்றல் முறையால் கற்போன் தன்னை விளக்குவதுடன் ஏனையோருடன் எவ்வாறு செயற் படவேண்டும் என்கின்ற தன்மையையும் கைவரப் பெறுவான். சமூக வாழ்க்கைக்கு சகிப்புத்தன்மை இன்றியமையாததாகும். ஏனெனில் சமூகம் என்பது பல்வகைமை கொண்டது. (தொடரும்)

கலாநிதி உலகநாதர் நவரத்தினம்
பணிப்பாளர், சமூக விஞ்ஞானத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாத் தீர்மானத்தில் யாருக்கு, யார் ஆதரவு?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது அமர்வு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது. சனி, ஞாயிறு தவிர்ந்த வார நாட்களில், வரும் 28 ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ள, இந்த அமர்வு இலங்கைக்கு மிகவும் முக்கியமானதொன்று. இந்தக்கூட்டத் தொடரில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தயாரித்துள்ள அறிக்கை, சமர்ப்பிக்கப்படவுள்ளது. அந்த அறிக்கையில் திருத்தப்பட்ட வரைபு, ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதா என்பது குறித்த அறிக்கையே இது. ஆனால், இலங்கை அரசாங்கம், தனது கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாலும், பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாலும், சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று நவநீதம்பிள்ளையின் அறிக்கை வலியுறுத்துகின்றது.

இந்த அறிக்கையை, இலங்கை அரசாங்கம் வழக்கம்போலவே, பக்கசார்பானது, நியாயமற்றது, வஞ்சனையானது என்று நிராகரித்திருந்தாலும், இதனை ஒரு சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் இந்த அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணைப்படி, தயாரிக்கப்பட்டது. அதற்குரிய நடைமுறைகளை நவநீதம்பிள்ளை கண்டிப்பாக கடைப்பிடித்திருக்க வேண்டும். உலகில் இன்று, ஐ.நா. பொதுச்செயலர் பதவிக்கு அடுத்த நிலையில், உயர்வாக மதிக்கப்படும் பதவியிலுள்ள ஒருவரால் ஐ.நாவின் கோட்பாடுகளை மீறி அவ்வளவு இலகுவாக அறிக்கை ஒன்றை சர்வதேச சமூகத்துக்கு சமர்ப்பித்து விட முடியாது. நவநீதம்பிள்ளையையும், அரசாங்கம் பக்கசார்பானவர் என்றே நீண்டகாலமாக கூறி வருகிறது. எவரெல்லாம் தமக்கெதிராக கருத்து வெளியிட்டாலும் அவர்களை பக்கசார்பானவர், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர், அவர்களிடம் பணம் வாங்கியவர் என்று குற்றஞ்சாட்டுவது அரசாங்கத்தின் வழக்கமாகிவிட்டது. அத்தகைய குற்றச்சாட்டுக்கு நவநீதம்பிள்ளை உள்ளானது ஆச்சரியமல்ல.

ஐ.நா. பொதுச்செயலர் பான்கீ மூன் இதுபோன்று கருத்து வெளியிட்டாலும், அவர்மீதும் இதுபோன்று தான் சேறு பூசப்படும். ஏற்கனவே, போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்க, ஐ.நா. நிபுணர்குழுவை நியமித்ததற்காகவும், அந்த அறிக்கையை வெளியிட்டதற்காகவும், ஐ.நா. பொதுச்செயலர் பான்கீ மூன் இலங்கையில் பட்டபாடு என்னவென்று யாரும் மறந்துவிட முடியாது. ஏன், இலங்கையில், பெரும்பான்மையானோரால் வணக்கப்படும் புத்தபெருமான் வந்து இப்படிக் கூறினாலும் கூட அவருக்கும் இதே கதிதான் ஏற்படும். ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை அரசாங்கம் நிராகரித்திருந்தாலும் இதுவே, இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள மூன்றாவது தீர்மானத்தின் அடிப்படையாக அமையவுள்ளது.

நவநீதம்பிள்ளையின் அறிக்கையையே நிராகரித்த அரசாங்கம், அமெரிக்கத் தீர்மானத்தை மட்டும் ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது. அதையும் அரசாங்கம் நிராகரிக்கவே போகிறது. ஏற்கனவே, அமெரிக்கத் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு அல்லது அதனைப் பலவீனப்படுத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் இறங்கியுள்ளது. இப்போது, ஒரு பக்கத்தில் இலங்கையும் மறுபக்கத்தில், அமெரிக்க பிரித்தானிய அணியும், இந்த தீர்மானம் தொடர்பாக எதிரும் புதிருமான ஆதரவைத் திரட்டி வருகின்றன. இதையடுத்து, கொழும்பு புதுடெல்லி, ஜெனிவா, நியூயோர்க், வோசிங்டன், லண்டன் ஆகிய நகரங்கள், இலங்கைக்கு எதிரான தீர்மானம் மற்றும் அதைத் தோற்கடிப்பதற்கான நகர்வுகளின் மையமாக மாறியுள்ளது. இந்த இராஜதந்திரப் போருக்கு ஆதரவு திரட்டுவதற்காக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் சிசன் நியூயோர்க் சென்றுள்ளார்.

பிரித்தானியத் தூதுவர் ஜோன் ரன்கின், கடந்த மாதம் புதுடெல்லியில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து பேசியுள்ளார். இதுபோலவே, இலங்கை அமைச்சர்கள் தொடர்ச்சியாக, ஆதரவு கோரி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் தலைநகரங்களுக்குப் பறந்தபடி உள்ளனர். கடந்த வாரத்தில் கூட, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும், சரத் அமுனுகம இந்தியா மற்றும் எதியோப்பியாவுக்கும் பயணம் மேற்கொண்டனர். பல்வேறு நாடுகளின் தலைநகரங்களிலும் இந்த விவகாரம் இப்போது முக்கியமான விவாதப் பொருளாகியுள்ளது.

ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வரப்போகும் தீர்மானத்தை, இலங்கை எதிர்த்தாலும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் எத்தகைய தீர்மானத்தையும் நடைமுறைப்படுத்தும் அதிகாரம், பேரவைக்குக் கிடையாது என்று நெஞ்சுரம் கொடுக்க முயன்றாலும், அரசாங்கத்தினால், சும்மா இருக்கமுடியவில்லை. ஓடிஓடிதனக்கு ஆதரவு திரட்டவும், இந்த தீர்மானத்தை தடுக்கவும் முனைந்து கொண்டிருக்கிறது. இதனால் ஒன்றும் செய்ய முடியாது என்றால், எதற்காக இலங்கை அரசாங்கம், இத்தனை முயற்சிகளையும் எடுக்க வேண்டும்?

ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் இலங்கை மீதான அழுத்தங்கள் அதிகரிக்கும் என்பதை அரசாங்கம் உணர்ந்து கொண்டுள்ளதால்தான், அதனைத் தடுப்பதற்கு



அல்லது பலவீனப்படுத்துவதற்கான வழிகளைத் தேடி ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு எத்தனை நாடுகள் ஆதரவளிக்கும், எத்தனை நாடுகள் அதனை எதிர்க்கும் என்ற ஆவல் நிறைந்த கேள்வி அனைவரிடமும் காணப்படுகிறது. இவற்றில், அமெரிக்கா மற்றும் அதனைச் சார்ந்த மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கப் போவது உறுதி. அதுபோல சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா, வியட்நாம் போன்ற இலங்கை ஆதரவு அல்லது அமெரிக்க எதிர்ப்பு நாடுகள் இந்த தீர்மானத்தை எதிர்க்கப் போவதும் உறுதி.

இந்த இரண்டு பக்கமும் உள்ள நாடுகளின் நிலை பற்றி எவருக்கும் கவலையில்லை. அவற்றின் நிலைப்பாடு ஒருபோதும் மாறப்போவதில்லை. தீர்மான வரைவு எத்தகையதாக இருந்தாலும், அதனை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பதில் அவை உறுதியைக் கடைப்பிடிக்கும். ஆனால், இந்த இரண்டுக்குள்ளும் அடக்கப்படாத முக்கியமான நாடுகளின் நிலை என்னவென்பதுதான் பெறுமதிமிக்க கேள்வியாகவுள்ளது.

குறிப்பாக இந்தியா, ஜப்பான், பிறேசில், தென்கொரியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். இந்த நாடுகள் இலங்கையுடனும் நெருக்கம் கொண்டவை, அமெரிக்காவுடனும் நெருக்கம் கொண்டவை. அதுதவிர, இலங்கை மீது கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதை விரும்பாத நாடுகளும் கூட, மேலும் இந்த நாடுகளின் முடிவு, தீர்மான வரைவைப் பொறுத்து முடிவு செய்யப்படுவதாகவும் இருக்கும் என்பதுடன், இவை எடுக்கும் முடிவு வேறு ஒரு சில நாடுகளினது முடிவுகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், தற்போதைய நிலையில், அமெரிக்கத் தீர்மானத்தை 23 நாடுகள் ஆதரிக்கலாம் என்ற கருத்து உள்ளது.

செக் குடியரசு, எஸ்தோனியா, மொன்ரெனிக்ரோ, ருமேனியா, ஒஸ்ரியா, பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, பிரித்தானியா, அமெரிக்கா, தென்கொரியா, இந்தியா, பெரு, ஆர்ஜென்ரீனா, பிறேசில், சிலி, கோஸ்டாரிக்கா, சியரலியோன், ஐவரிகோஸ்ட், பெனின், மெக்சிக்கோ, மசிடோனியா ஆகிய 23 நாடுகளே இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் என்று நம்பப்படுகிறது. இவற்றில் இந்தியா, பிறேசில் ஆகிய நாடுகளின் நிலை, தீர்மான வரைவைப் பொறுத்து மாறலாம் என்ற கருத்தும் உள்ளது. எவ்வாறாயினும், உள்நாட்டு அரசியல் அழுத்தங்கள், தீர்மான வரைவை விடவும், இந்தியாவின் முடிவை, தீர்மானிக்கும் வல்லமை கொண்டது என்பதை மறுக்க முடியாது.

2012 ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு 24 நாடுகள் ஆதரவளித்தன. 2013 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு 25 நாடுகள் ஆதரவளித்தன. ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக, இந்தமுறை 23 அல்லது அதற்குக் குறைவான நாடுகளே, அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை ஆதரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 47 நாடுகளைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், குறைந்தது 24 நாடுகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்படுவதையே அமெரிக்கா விரும்புகிறது. ஏனென்றால், அதுதான் பேரவையின் பெரும்பான்மை நாடுகளின் கருத்தாக எடுத்துக் கொள்ளப்படும். அதற்காக 23 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்படும் தீர்மானம் அதிகாரமற்றது என்றோ, பெறுமதியற்றதென்றோ கருத முடியாது. ஏனென்றால், 23 நாடுகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், எஞ்சிய நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அர்த்தமாகிவிடாது.

இலங்கைக்கு உறுதியான ஆதரவை வழங்கும் ரஷ்யா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வியட்நாம், குவைத், மாலைதீவு, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, சீனா, கொங்கோ, கியூபா, வெனிசுவேலா ஆகிய 13 நாடுகளே, அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கும் சாத்தியங்கள் உள்ளன. இவற்றில், சவுதி அரேபியா மற்றும் குவைத் தொடர்பாக சில சந்தேகங்கள் இருக்கின்றன.

ஏனென்றால், இலங்கையில் முஸ்லிம்கள் தாக்கப்படுவது தொடர்பாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனுப்பிய அறிக்கை ஒன்று, இந்த நாடுகளின் முடிவின் மீது தாக்கம் செலுத்தலாம் என்ற கருத்து உள்ளது. குறிப்பாக, மதசிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை அமெரிக்கத் தீர்மானம் வலுவாக உள்ளடக்கியிருந்தால், இந்த இரண்டு நாடுகளினதும் முடிவுகளும் கேள்விக்குறியாகலாம் என்ற சந்தேகம் அரசாங்கத்துக்கு உள்ளது.

இதேவேளை ஜப்பான், கசாக்ஸ்தான், கென்யா, எதியோப்பியா, பொட்ஸ்வானா, புர்கினாபாசோ, காபோன், தென்னாபிரிக்கா, நமிபியா ஆகிய 8 நாடுகள் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தில் நடுநிலை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நாடுகளை அசைத்துப் பார்க்கும் முயற்சியில் இரு தரப்புமே ஈடுபட்டுள்ளன.

முக்கியமாக ஜப்பானையும், தென்னாபிரிக்காவையும் தன்பக்கம் இழுக்க அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த நாடுகளுக்கு மட்டுமன்றி, ஏனைய ஆபிரிக்க நாடுகளுக்கும் சிறப்புத் தூதுவர்களை அனுப்பி இலங்கையும் தன்பக்கம் இழுக்க முனைகிறது. இந்த நடுநிலை வகிக்கும் நாடுகளின் கையில்தான், இரு தரப்பும், தமது மேலதிக பலத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதேவேளை, அல்ஜீரியாவும், மொராக்கோவும் வாக்கெடுப்பு நேரத்தில் சபையில் இருக்காது என்றும் கருதப்படுகிறது. இவை பொதுவான ஒரு கணிப்பீடாக இருந்தாலும், இறுதி வாக்கெடுப்பு நிலவரம் எவ்வாறு இருக்கும் என்ற கேள்விக்கு வரும் 28 ஆம் திகதியே விடை கிடைக்கும். அதுவரை ஆதரவு, எதிர்ப்பு நாடுகள் பற்றிய விவாதங்கள் தொடர்ந்து செல்வதைத் தவிர்க்க முடியாது.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் நடந்தது இன அழிப்பு என்பதில் தமிழ்த் தலைவர்கள் உறுதியாக இருக்க வேண்டும்

# தமிழ்மக்களை வைத்து அரசியல் ஆதாயம் தேடுகிறது இந்தியா- குருபரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஜெனீவா மனிதவுரிமை கூட்டத் தொடரில் இம்முறையும் இலங்கைக்கெதிரான சர்வதேச விசாரணை கொண்டு வரப்படமாட்டாது என சிவில் சமூக பிரதிநிதியும் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளருமான கு.குருபரன் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் வெளியிடப்பட்ட ஜெனீவா வரைவுத் தீர்மானத்தை மேற்கோள்காட்டியே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது ஆரம்பமாகியுள்ள ஜெனீவா மனிதவுரிமை கூட்டத் தொடரில் இலங்கைக்கெதிரான சர்வதேச விசாரணை என்ற தீர்மானம் கொண்டு வரப்படப் போவதில்லை.

மாறாக கடந்த ஜெனீவா மனித வுரிமை கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் போல் இலங்கை அரசே தன்னைத் தானே விசாரணை செய்யும் தீர்மானம் தான் நிறைவேற்றப்படவுள்ளது.

அதாவது குற்றமிழைத்தவர்களே தம்மை விசாரணை செய்வது போன்ற தீர்மானம்தான் இம்முறையும் இயற்றப்படவுள்ளது.

ஐ.நா.வின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோர் கூறியதைப்போன்று இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை இம்முறை இடம்பெறாது.

இவர்கள் வடபகுதிக்கு வந்து சென்றதன் பின்னர் கூறியவற்றில் என்னையும் இம்முறை இலங்கைக்கெதிரான பிரேரணையில் உள்ளடக்கவில்லை.

ஆகவே ஜெனீவாவில் இலங்கைக்கு பேராபத்து, சர்வதேச விசாரணை என்றெல்லாம் மிகைப்படுத்திக்கூறி மக்களை பெரும் எதிர்பார்ப்பிற்குள் தள்ளிவிடக்கூடாது.

மக்களுக்குள் பெரும் எதிர்பார்ப்பைத் தூண்டிவிட்டு பின்னர் அது நடைபெறாமல் போவதனால் எமது மக்கள் திரும்பத் திரும்ப ஏமாற்றத்துக்குள்ளாக்கப்படுகின்றனர்.

இவ் ஏமாற்றத்தினால் எமது மக்கள் அரசியல் ரீதியாக சோர்வு நிலையை அடைந்து விடுகின்றனர்.

ஆகவே, இவ்வாறான மிகைப்படுத்தல், பொய் கூறல் அரசியல் தமிழ்த்தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல.

இலங்கைக்கு எதிராக இம்முறை கொண்டுவரப்படவுள்ள இந்த நீர்த்துப்போன பிரேரணையை ஆதரிப்பதா? இல்லையா? என்ற வெற்று நாடகத்தை இந்தியா அரங்கேற்றி இறுதியில் ஈழத்தமிழர்களுக்காக இந்தியா இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரித்தது என்றும் கூறி தமது அரசியல் இலாபத்தை தேடிக்கொள்வர்.

ஆகவே, ஈழத்தமிழர்கள் தனியே சர்வதேசத்தை மட்டும் நம்பியிராது தன்னாலான முயற்சிகளை மேற்கொள்வதோடு தனது நிலைப்பாட்டிலிருந்து இம்மியளவும் தளர்ந்து விடக்கூடாது.

சர்வதேசத்தை மட்டுமே நம்பியிருந்த எமக்கு 2009 ஆம் ஆண்டு மிகப்பெரிய பாடம் கற்பிக்கப்பட்டு விட்டது.

இங்குள்ளவர்கள் ஜெனீவாவுக்கு செல்கின்றோம் எனக் கூறிச் செல்கின்றனர். ஆனால் அங்கு சென்று என்ன மாற்றத்தைக் கொண்டு வரப் போகின்றனர் என்பதுதான் புரியவில்லை.

கொசோவோ, யூகோஸ்லாவியா போன்ற தனிநாடு அங்கீகாரம் பெற்ற நாடுகள் தமக்கு நடைபெற்றது இன வழிப்புத்தான் என்பதில் உறுதியாக விருந்தன.

ஆனால், இங்கோ இன அழிப்பு என்பதனை இன அழிப்புக்கு ஒப்பான என்று மாற்றிவிட்டனர்.

கற்பழிப்பு என்பதனை கற்பழிப்புக்கு ஒப்பானது எனக்கூறி விட முடியுமா?

ஆகவே, எமது தமிழ்த் தேசியத் தலைவர்கள் இங்கு நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதில் உறுதியாகவிருக்கவேண்டும். என்றார். (அ-4)

## குடும்பப்பெண் மீது வாள்வெட்டு

(கரவெட்டி)


வடமராட்சி அல்வாய் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, குறித்த பெண் கடந்த ஞாயிற்றுக்கிழமை தேவையின் நிமிர்த்தம் வெளியில் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை அப்பெண்ணை துவிச்சக்கரவண்டியில் பின் தொடர்ந்து சென்ற நபரொருவர் வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் படுகாயமடைந்த இரத்தினசிங்கம் ராதா (வயது -40) என்ற அல்வாய் வடக்கைச் சேர்ந்த குடும்பப் பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒரு மாதத்திற்கு முன்னர் குறித்த பெண்ணின் மகன் வாள்வெட்டுக்கு இலக்காகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-24)





சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சகல முறைப்பாடுகளை பதிவு செய்யும் பிரிவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன நாடாவெட்டி திறந்து வைப்பதனையும் கலந்து கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



முல்லைத்தீவு மணற்குடியிருப்பைச் சேர்ந்த கந்தசாமி பேரின்பநாதன் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி முல்லை மாவட்ட சமாதான நீதவானாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். (அ)

# காங்கிரஸ் அரசு தமிழர்களுக்கு துரோகம் இழைத்து விட்டது

## ஜெயலலிதா ஆவேசம்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை, மீனவர் பிரச்சினை, நதிநீர்ப் பங்கீடு என காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசால் தமிழர்களுக்கு துரோகம் இழைக்கப்பட்டதாக தமிழக முதல்வரும், அதிமுக பொதுச் செயலருமான ஜெயலலிதா பட்டியலிட்டார்.

காங்கிரஸ் இழைத்த பத்து துரோகம் எனப் பட்டியலிட்ட ஜெயலலிதா அதில் முதன்மையானதாக இலங்கைத் தமிழர்கள்மீது இழைக்கப்பட்ட துரோகத்தை குறிப்பிட்டார்.

முதல்வர் ஜெயலலிதா இட்ட பட்டியல்!

இலங்கை தமிழர் பிரச்சினையில் மத்திய காங்கிரஸ் அரசு என்ன செய்தது? இலங்கை அரசுக்குத் தேவையான இராணுவப் பயிற்சி, ஆயுதங்கள் ஆகியவற்றை அளித்தது. அங்குள்ள தமிழர்கள் அழியக் காரணமாக இருந்தது. இது முதல் துரோகம்.

போர்க் குற்றங்கள் புரிந்தவர்களை போர்க் குற்றவாளிகள் என அறிவிக்கவும் இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்கவும் ஐக்கிய நாடுகள் சபை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இனப் படுகொலை செய்தவர்களை தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை நாட்டை நட்பு நாடு என்று சொல்வதை நிறுத்த வேண்டும். தனி ஈழம் குறித்து பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் இந்தியா சார்பில் எவரும் கலந்து கொள்ளக் கூடாது என பல்வேறு தீர்மானங்கள் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் என்னால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் இவற்றின் மீது மத்திய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா? இல்லையே! இலங்கை அரசுக்கு சாதகமாகத் தானே மத்திய காங்கிரஸ் அரசு நடந்து கொண்டது! இது இரண்டாவது துரோகம்.

இலங்கை அரசால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காத அரசு தற்போதைய மத்திய காங்கிரஸ் அரசு. இது மூன்றாவது துரோகம்.

கச்சதீவினை மீட்பதற்காக நான் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். அந்த வழக்கில் தமிழக மீனவர்களுக்கு எதிராக மனுத்தாக்கல் செய்த அரசு தற்போதைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு. இது நான்காவது துரோகம்.

தமிழகத்திற்குரிய மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை குறைத்த அரசு தற்போதைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு. இது ஐந்தாவது துரோகம்.

இதுபோன்ற பத்து துரோகங்களை காங்கிரஸ் இழைத்ததாக அவர் பட்டியலிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மத்திய அமைச்சர் பரூக் அப்துல்லா, காஷ்மீர் மக்கள் மிகப்பெரிய மின்சார திருடர்கள் என கூறியதற்கு கண்டனம் தெரிவித்து காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் மக்கள் ஜனநாயக கட்சி தொண்டர்கள் அவரது உருவப்பொம்மையை எரித்து போராட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்.

## காங்கிரசை யாராலும் வீழ்த்த முடியாது- ஞானதேசிகன்



காங்கிரசை யாராலும் வீழ்த்த முடியாது; எந்தச் சவாலையும் சந்திக்கத் தயார் என தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

அரு.சங்கரலிங்கம் படத்தை திறந்து வைத்து அவர் மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் உரையாற்றுகையில் ,

தமிழகத்தில் காமராஜர் வசந்த காலம். நாங்கள் அவரை தேடிச் சென்றோம். அதே உணர்வுடன் காங்கிரஸ் தொண்டர்கள் இருக்க வேண்டும்.

இது தேர்தல் காலம். யார் காங்கிரசுக்கு எதிராக பிரசாரம் செய்தாலும் சரி எந்த சவாலையும் சந்திக்க காங்கிரஸ் தயார். காங்கிரசை யாராலும் வீழ்த்த முடியாது.

எங்களை வசை பாடுபவர்களுக்குதான் நாங்கள் பல கட்டங்களில் உதவி இருக்கிறோம்.. அவர்கள் உதவியை காங்கிரஸ் ஒருபோதும் நாடியது இல்லை என்று கூறினார். (2)

பாரதச் செய்தி

## இந்தியா-பாகிஸ்தான் குழுவினர் சந்திப்பு

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு வர்த்தகம் தொடர்பாக, இந்திய, பாகிஸ்தான குழுவினர்நேற்றுமுன்தினம்ஆலோசனை நடத்தினர். இந்தியா பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் பல்வேறு இடங்களில் இரு நாட்டு வர்த்தகர்களும் அவ்வப்போது வர்த்தகம் மேற்கொள்வது வழக்கம். இங்கு இரு நாட்டு மக்களும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது. இதை மேம்படுத்துவது தொடர்பாக, இரு நாட்டு அதிகாரிகளும் நேற்று முனதினம் ஆலோசனை நடத்தினர். கடந்த ஜனவரி 17இல், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரைச் சேர்ந்த லொறி சாரதி 100ரூபா கோடி மதிப்பிலான பிரவுன சுகர் கடத்தி வந்ததை தொடர்ந்து அவரை, வடக்கு காஷ்மீரில் இந்திய பொலிசார் கைது செய்தனர். இதனால் இரு தரப்புக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வந்தது. நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, கைது செய்யப்பட்ட சாரதியின் வழக்கு தொடர்பான விபரங்களை இந்திய அதிகாரிகள், பாகிஸ்தான் குழுவினரிடம் ஒப்படைத்தனர. (2)

# இலங்கைக்கு எதிரான வரைவுத்தீர்மானம் அனைத்து தரப்பிலும் ஏமாற்றத்தை ஏற்படுத்தும்

## தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவிப்பு

**இலங்கைக்கு எதிரான பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கும் வரைவுத் தீர்மானம் அனைத்து தரப்பிலும் பெருத்த ஏமாற்றத்தையே ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின்கூட்டத்தில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வரவிருக்கும் தீர்மானம் பெருமளவுக்கு தீர்வு காண்பதாக இருக்குமென்று உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், ஆணையக்கூட்டத்தில பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கும் வரைவுத் தீர்மானம் அனைத்துத் தரப்பிலும் பெருத்த ஏமாற்றத்தையே ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள்ஆணையத்தின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, இலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகவே சென்று விரிவாக கள ஆய்வு நடத்தியதோடு பாதிக்கப்பட்ட தமிழர்களைச் சந்தித்து அவர்களுடைய துன்ப துயரங்களை விசாரித்தறிந்து, வழங்கிய அறிக்கை உலகத் தமிழர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியது. நடந்து முடிந்து போனநிகழ்வுகள் குறித்து விசாரிப்பதற்குத் தேவையான அரசியல் உறுதி இலங்கை அரசுக்கு இல்லை என்றும், இலங்கை அரசு தொடர்ந்து சர்வாதிகார திசையில் பயணித்து வருகிறது என்றும், நவநீதம்பிள்ளை தனது அறிக்கையிலே தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்துங்கூட, அமெரிக்காவின் வரைவுத் தீர்மானம் நவநீதம் பிள்ளையின் ஆய்வறிக்கையில் உள்ள நுட்பமான சிந்தனைகளைச் சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை. இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் வழங்கிடும் வகையில் வரைவுத் தீர்மானம் அமைந்திருக்கிறது.

தற்போது அமெரிக்காவின் வரைவுத்தீர்மானத்தில் அரசியல் தீர்வு பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்பது இலங்கை வடக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்தி அதிகாரமில்லாத ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்துவதல்ல.

ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வு எது என்பதனை அவர்களே நிர்ணயித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை உலகச் சமுதாயம் செய்ய முன் வந்தால் தான், அவர்களுக்கு நீதி கிடைத்ததாகச் சரித்திரம் பதிவு செய்யும். ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இரண்டு முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எவ்வித ஆக்கப்பூர்வமான விளைவையும் ஏற்படுத்தவில்லை. அதைப் போலவே தான் இந்தத் தீர்மானமும் இலங்கை அரசால் புறக்கணிக்கப்பட்டு எந்தப் பயனையும் ஈழத் தமிழர்களுககு வழங்கிடப்போவதில்லை.

எனவே "டெசோ" சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் பலமுறை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டபடி இந்திய அரசே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தில் தனித் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து, அதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதுதான் உகந்த வழியாக இருக்க முடியும். இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள்,போர்க் குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவை குறித்து சுதந்திரமான, நம்பகத்தன்மை வாய்ந்த, சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும. ஈழத்தமிழர்கள் தங்களுக்குத் தேவையான அரசியல் தீர்வை, அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள் ளும் வண்ணம் ஐ.நா. மேற்பார்வையில் ஏற்கனவே சில நாடுகளில் நடத்தியதைப் போல, "பொது வாக்கெடுப்பு" நடத்தப்பட வேண்டுமென்றும் தீர்மானத்தை இந்திய அரசு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுவதே ஈழத் தமிழர்களுக்கும், உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்கும், தமிழகத்திலே வாழும தமிழர்களுக்கும், தமிழ் அமைப்புகளுக்கும் நிறைவளிக்கக் கூடிய காரியமாக அமையும் என தனது அறிக்கையில் கூறியுள்ளார். (2)

# தீவிரவாத அச்சுறுத்தலை எதிர்த்து போராட பலமான ஒத்துழைப்பு அவசியம்

## பிம்ஸ்டெக் நாடுகளுக்கு மன்மோகன் அழைப்பு



'இயற்கை பேரழிவு, தீவிரவாத சவால்களுக்கு கூட்டாக தீர்வு காண வேண்டும்" என்று பிம்ஸ் டெக் நாடுகளுக்கு பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்தார். இந்தியா, வங்கதேசம், இலங்கை, தாய்லாந்து, மியன்மார், பூடான் ,நேபாளம் ஆகிய 7 நாடுகள் அடங்கிய 'பிம்ஸ்டெக்' அமைப்பின் 3ஆவது உச்சி மாநாடு மியன்மாரில உள்ள நேபிடோவில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், 'தீவிரவாதம், சர்வதேச குற்றங்கள், போதை பொருள் கடத்தல் போன்றவற்றால் அதிகரித்து வரும் அச்சுறுத்தலுக்கு எதிராக கூட்டாக போராடப்படும். வர்த்தகம், எரிசக்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் உள்ள ஒத்துழைப்பும், இணக்கமும் மேலும் அதிகரிக்கப்படும்' என்று பிரகடனம் செய்யப்பட்டது.மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் மன்மோகன் சிங், "பிம்ஸ்டெக் பகுதிகளில் தீவிரவாதத்தால் உருவாகியுள்ள அச்சுறுத்தலை எதிர்த்து போராடுவதில் பலமான ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த பகுதிகளின் பாதுகாப்பை பிரித்து பார்க்க முடியாது. இயற்கை பேரழிவு முதல் தீவிரவாதம் வரை, பல பொதுவான சவால்களை பிம்ஸ்டெக் நாடுகள் சந்தித்து வருகின்றன. இவற்றை கூட்டாக எதிர்த்து போராட வேண்டும். ஆசிய மற்றும் உலக நாடுகளின் அமைதி, ஒற்றுமை, பாதுகாப்பு, வளமை ஆகியவற்றின் மேம்பாட்டுக்கு பிம்ஸ்டெக் நாடுகள் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பை [illegible] வேண்டும்" என்றார். 'பிம்ஸ்டெக்' அமைப்புக்காக வங்கதேச தலைநகர் டாக்காவில் நிரந்தரமான தலைமையகம் அமைக்கவும், பிம்ஸ்டெக் நாடுகளின் பருவநிலை கண்காணிப்பு மையத்தை இந்தியாவில் அமைக்கவும், கலாசார சார்ந்த ஆணையம் அமைக்கவும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

டீஸ்டா நதி நீர் பங்கீடு தொடர்பான உடன்பாடு கையெழுத்தாவது நீண்ட காலமாக தாமதம் ஆகிவருவது குறித்த பிரச்சினையை மன்மோகன் சிங் கவனத்திற்கு வங்கதேச பிரமதர் ஷேக் ஹசீனா கொண்டு வந்தார். டீஸ்டா நதி நீர் பங்கீடு விவகாரம் மிகவும் சிக்கலான ஒன்று. இது தொடர்பாக இந்தியாவில் சம்பந்தப்பட்ட மாநிலத்துடன் கருத்தொற்றுமை ஏற்பட முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக பிரதமர் மன்மோகன் சிங் பதிலளித்தார்.

மன்மோகன்சிங் ஹசீனா இடையே சந்திப்பு சுமார் 20 நிமிடங்கள் நீடித்தது. பிம்ஸ் டெக் அமைப்பின் உறுப்பினர் [illegible] மேம்படுத்தும் [illegible] விரைவு படுத்த 7 நாடுகளின் தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பிரேரணை தொடர்பில் ம.உரிமை அமைப்புக்கள் அதிருப்தி

ஜெனீவா மனிதவுரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணையின் நகல் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்லாமல் மனிதவுரிமைகளுக்காக சர்வதேச அளவில் குரல் கொடுத்து வரும் குழுக்களும் ஆர்வலர்களும் அதிருபதியை வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என ஆரம்பம் முதல் சர்வதேச ரீதியாக பரந்து வாழும் தமிழர்களின் சார்பில் ஒருமித்த குரலினை எழுப்பி வரும் பிரித்தானிய தமிழர் பேரவை இது தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட்ட நிலையில் அனைவரும் ஒன்றிணைந்து தமிழர் விடயத்தில் ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது.

ஜெனீவாவில் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவை நடைபெற்றுவரும் அதேவேளை, இதன் ஒரு கட்டமாக பிரித்தானிய தமிழர் பேரவையின் மனிதவுரிமைகள் செயறபாட்டுப் பரிவின் ஒரு பகுதியினர், மறுமுனையில் இந்தியாவிலும் பலதரப்பட்ட அரசியல் கட்சி உறுபபினர்கள் மற்றும் மனிதவுரிமைகள - சமூக ஆர்வலர்களுடனும் கலந்துரையாடல்களிலும் பேச்சுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இந்தியாவின முன்னணி சமூக ஆர்வலர் மற்றும் மனிதவுரிமை செயற்பாட்டாளரான மேதா பட்கர் பர்வின்னுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்ட பிரித்தானிய தமிழர் பேரவையின் மனிதவரிமை செயற்பாட்டு உறுப்பினர்கள், அதன் தொடர்ச்சியாக அரசியல் பிரமுகர்களை சந்தித்து தமிழர்கள் சார்பாக தமது கருத்துக்களை வலியுறுத்தி தமிழர்பால் இந்தியாவினை வென்றெடுக்க முனைப்புக் காட்டி வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் மற்றும் உறுப்பினரான டிராஜா ஆகியோருடன சந்திப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பலகட்டப் பேச்சுக்கள இடமபெறவுள்ளன. (அ-2)

# நாடாளுமன்ற விவாதங்கள் மீண்டும் ஒளிபரப்பாக்கப்படும்

நாடாளுமன்ற விவாதங்கள் மீண்டும் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிலையியற் கட்டளைகளில் சிறு மாற்றங்களைச் செய்து நாடாளு மன்ற விவாதங்களை மீள ஒளிபரப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

நேரடி ஒளிபரப்பு தொடர்பில் விரைவில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றும் அவதூறு உரைகள் ஹன்சார்டிலிருந்து நீக்கப்பட்டாலும், நேரடி ஒளிபரப்பிலிருந்து நீக்க முடியாது என நாடாளு மன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

அநேகமான நாடாளுமன்றங்களில் விவாதங்கள் தொகுக்கப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்படுவதாகக் குறிப்பிடடுள்ளார்.

எனவே, இந்த விடயங்களை கருத்திற் கொண்டு நேரடி ஒளிபரப்பிற்கு அனுமதியளிக்குமாறு கோரியுள்ளார்.

இவற்றைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் உறுதியளித்துள்ளார். (அ-2)

# இரணைமடு குடிநீர் திட்டத்தில் எந்த உள்நோக்கமும் இல்லை

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

(கொழும்பு)

குடாநாட்டின் சமூக நலன் சார்ந்த இரணைமடு குடிநீர்த்திட்டத்தினூடாக சிங்களக் குடியேற்றம் என்ற வகையிலான எந்தவொரு உள்நோக்கமும் அரசாங்கத்திடம் கிடையாது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஸ்ரீதரன் எம்.பி. முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாக ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் நீர் வழங்கல் அமைச்சருமான தினேஷ் குணவர்தன நேற்றுமுன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை கூடியது.

சபையின் பிரதான நடவடிக்கைகளின் பின்னர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி எழுந்த அமைச்சர் தினேஷ் குணவர்தன இரணைமடு குடிநீர்த்திட்டம் தொடர்பான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.எஸ்.ஸ்ரீதரனின் செய்தி தொடர்பில் அமைச்சின் விளக்கத்தை முன்வைத்தே மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-2)

# விசேட தேவையுடையோருக்கு மருத்துவ சான்றிதழ் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசேட தேவைக்குட்பட்டோருக்கான சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான மருத்துவ சான் றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற வுள்ளதாக மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இதன்படி, இந்நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மறுநாள் 15 ஆம் திகதி சனிக்கிழ மையும் காலை 9 மணிமுதல் பிற் பகல் 4.30 மணிவரை கரைதுறைப் பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, விசேடதேவைக்குட்பட்டோர்துங்களுக்கான மருத்துவ சான்றி தழைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-29)


# பிரிவுத்துயர் பகிர்வு



## கணபதிப்பிள்ளை இராமநாதன்

வரணி இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும் ஒல்லாந்து நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராமநாதன் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று முற்பகல் 11 மணிக்குஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் குடமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## ஆபிரகாம்பிள்ளை ஜோர்ஜ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆபிரகாம் பிள்ளை ஜோர்ஜ் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று முற்பகல் 10 மணிக்கு இளவாலை அன்னம்மாள் ஆலயத்தில் திருப் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவு டல் அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



## பாவிலுப்பிள்ளை கபிரியேற்பிள்ளை

பாசையூரைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை கபிரியேற்பிள்ளை3 ஆம் திகதி திங்கட் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு Dreifaltigkeitsfriedhof, ScheffoldstraBe 176, 73525 SChwabisch Gmund Germany என்னும் முகவரியில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.



## திருமதி சண்முகம் நாகம்மா

காரைநகர், களபூமி பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் வவுனியா திருநாவற்குளம், சுவிஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நாகம்மா கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு Kantonsspital Aarau, House 19, 5000 Aarau, Switzerland என்னும் முகவரியில் நடைபெறும்.



## திருமதி நாகலிங்கம் சின்னத்தங்கச்சியம்மா

நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் கட்டை கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சின்னத்தங்கச்சியம்மா முதலாம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## திருமதி திருச்செல்வம் றோசலீன்

புதுக்குடியிருப்பு மந்துவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் றோசலீன் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



## திருமதி இரத்தினசபாபதி நாகரட்ணம்

பருத்தித்துறை புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி நாகரட்ணம் கடந்த 3 ஆம் திகதி திங்கட் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

# நல்லொழுக்க நிறுவனத்தின் கடன்திட்ட நடவடிக்கைகள்

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினர் கடந்த வருடம் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 62 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை செலவு செய்துள்ளதாக நிறுவன இணைப்பாளர் ஆகுலநாதன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியிலுள்ள 178 பயனாளிகளுக்கு வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் முகமாக மேற்குறித்த நிதியை அந்நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

இதன் படி கால்நடை வளர்ப்புக்காக 76 பயனாளிகளுக்கு 36 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவும் சிறு கைத்தொழில் முன்னெடுப் பிற்காக 20 பயனாளிகளுக்கு 9 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் வியாபாரத்திற்காக 15 பயனாளிக ளுக்கு 7 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவும் கடற்றொழிலுக்காக 16 பயனாளிகளுக்கு 5 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவும் வீட்டுக்கடன் திட்டத்திற்கு பயனாளி ஒருவருக்கு 2 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு இவ் வறுமை ஒழிப்புத்திட்டம் இவ் வருடமும் மேற் கொள்ளப்படவுள்ளதாக இணைப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-9-10)

# அம்மா பகவானின் ஜென்ம தினம்

ஸ்ரீ கல்கி பகவானின் 65 ஆவது ஜென்ம தினம் நாளை வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு சுன்னாகம் சிவன் கோவில் மண்டபத்திலும் பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சுவர்ணயுக ஆலயத்திலும் நடைபெறவுள்ளது. (அ-9)

# நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி ஸ்ரீ பழனி கூட்டுறவுச் சங்கத்தின் 22 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

இதற்கமைய, இவ்வாண் டிற்கான நிர்வாக சபையின் தலைவர் திருமதி ப. ஸ்ரீகாந்தரூபி, உபதலைவர் திருமதி வி.விமலாம்பிகை, செயலாளர் திருமதி து. சுஜிதா, பொருளாளர் திருமதி சி.நந்தினி, நிர்வாக உத்தியோகத்தர்களான திருமதி பி. சுரேக்கா, திருமதி வி. பிரதீபா, திருமதி து. பரமேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு கணக்காய்வு குழுவில் வி.மகாலிங்கம் செல்வி வை.துஷ்யந்தினி, திருமதி [illegible] ஆகியோர் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (அ-9-29)

## யோ.புரட்சியின் கவிதை வெளியீடு

வள்ளுவர்புரம், யோ.புரட்சி எழுதிய எதிர் வீட்டு நாயும் என் ஏழை நாயும் எனும் கடலில் ஓர் கவிதை வெளியீட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு முல்லைத்தீவுக் கடற்கரையிலுள்ள சுனாமி நினைவாலயம் அருகில் தமிழ் FM அறி விப்பாளர் ரி.எஸ். முகுந்தன் தலைமையில் நடைபெறும். (அ-2)

## சுஜாதாசிங் இலங்கை விஜயம்

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுஜாதாசிங் இம் மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தகவல் வெளியாகியுள்ளன.

அவர் தனது விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும அவ வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-2)

## ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் வெளியிடப்படும் மாசிமாத ஞானச்சுடர் வெளிவந்துள்ளது.

இந் நூலானது ஆன்மீகம் சார்ந்த அறநெறி வாழ்வு, வட இந்திய தல யாத்திரை, மரணத்தின் பின்..., சைவத் திருக்கோயிற் கிரியைநெறி, சைவ சமயத்தின் அருமை பெருமைகள், சிறுவர் கதைகள், சைவசமய வினா விடை, அன்புவழிப்பாடல்கள் ஆகிய அம்சங்களை உள்ளடக்கி வெளியாகியுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவாக...



## மட்டுவில் வடக்கு,
## சாவகச்சேரியைச் சேர்ந்த
## அமரர் திருமதி மாதவன்
## இரஞ்சினி



மண்ணில் 09.11.1958 விண்ணில் 16.02.2013

திதி: மாசிமாத பூர்வபக்க ஷஷ்டி

நீர் பிரிந்து வருடம் ஒன்று
சென்றதம்மா
என்றென்றும் ஆறாது எம்துயரம்
அன்புடனே அறிவூட்டி எமக்கு
ஒளியூட்டி
அயரா உழைப்பாலே எம்
வாழ்வுக்கு வளமூட்டி
நலமோடு நாம் வாழ
நல்வழிகாட்டிய
எம் அன்பு அன்னையே!
இல்லத்தின் விருட்சமாய்!
பாசத்தின் இருப்பிடமாய்!
பண்புக்கு இலக்கணமாய்! வாழ்ந்து
எம்மையும் வாழ வைத்த
அன்னையே!
தங்களின் பிரிவின் துயரம்
ஆறவில்லை எம்மனதில்
எம்முயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகளை
எம் மனதில் சுமந்திருப்போம்
அன்னையே!
ஆண்டவனடியில் சாந்தியுடன்
வாழ்வாயாக!

(5754)

உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டுதல் செய்யும்
கணவன்:- கு:மாதவன்
பிள்ளைகள்:- சர்மிளா, யோகரஞ்சன், மைதிலி
மருமக்கள்:- ஸ்ரீதரன், சந்திராதேவி, பரமேஸ்வரன்
மற்றும் பேரப்பிள்ளைகளும்.

ஊரெழு தெற்கு,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பர மெத்தையிலேயே அநேக சாம்ராச்சியங்கள் அழிந்தன.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கில் தொடரும் அவல மரணங்கள் தேவலோகத்தில் அவசர மாநாடு-5

தேவலோகத்தில் நடக்கும் மாநாட்டில் வடக்கின் முதலமைச்சர் என்ன செய்கின்றார்? என்று விஷ்ணு பரமாத்மா கேள்வி எழுப்ப அதற்குப் பதிலளித்த

**சித்திரகுப்தன்:** சுவாமி! அவர் மனதளவில் கவலைப்படுகின்றார். வடக்கின் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கிய அவரைத் தமிழ் மக்கள் அமோகமாக வெற்றி அடையச் செய்தனர் ஆயினும்,

அவர் எதிர்பார்த்தவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கவில்லை. இதன் காரணமாக ஏன் தான் இந்தப் பதவியை பொறுப்பேற்றேன் என்று அவர் கவலை கொள்வதுண்டு.

வடக்கின் முதலமைச்சரின் சிந்தனையைப் புரிந்து கொள்ளும் அளவில் கூட்டமைப்புக்குள் ஒரு பொதுவான கட்டமைப்பு இல்லை. இதன் காரணமாக அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

போதாக்குறைக்கு அவர் எதைக் கதைத்தாலும் அதனை ஊதிப் பெருக்க வைத்து ஊடகங்கள் எழுதித் தள்ள, எல்லாப் பக்கத்தாலும் வடக்கு முதலமைச்சர் நொந்து போயுள்ளார்.

என்ன செய்வது? ஒரு தலைமையை ஏற்று அதற்கு உரிய மதிப்புக் கொடுத்து, கொள்கைக்காகப் பாடுபடும் பக்குவம் வடபுலத்து அரசியலில் இல்லாத பஞ்சத்தால், தலைமைக்கு மிகப் பெரும் திண்டாட்டமே. இது தவிர வடக்கின் முதலமைச்சர் எல்லா நிகழ்வுகளுக்கும் பிரதம விருந்தினராக செல்வதும் வடக்கு மாகாண அரசின் கடிவாளத்தை இறுக்கமாகப் பிடிக்க முடியாததற்கு காரணம் என்பதை தேவலோக மாநாட்டில் தெரிவிப்பது எனது தார்மீகக் கடமை.

பகல் முழுவதும் விழா, இரவுமுழுவதும் மறுநாள் நிகழ்வுக்கான உரை தயாரிப்பு என்றால் வடக்கு மாகாண நிர்வாகத்தை எங்ஙனம் ஒழுங்குபடுத்த முடியும்? இவ்வாறு சித்திரகுப்தன் கூற இடையில் குறுக்கிட்ட பிரமதேவர், சித்திரகுப்தா நீவிர் இலங்கையின் வடபுலத்திற்குச் சென்று நிலைமையை நேரில் அவதானித்ததில் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கான தீர்வாக எதைக் கூறமுடியும்?

**சித்திரகுப்தன்:** சுவாமி! வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட உறுப்பினர் அனைவரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகின்ற விழாக்கள் மற்றும் நிகழ்வுகளிலேயே பங்கு பற்றுதல் என்ற முடிவை கட்டாயமாக எடுத்தாக வேண்டும்.

திங்கள் முதல் வெள்ளி வரையான ஐந்து நாட்களும் வடபுலத்தில் இருக்கக்கூடிய–அவரவருக்கு ஒதுக்கப்பட்ட திணைக்களங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள் போன்றவற்றுக்கு நேரில் செல்வது, கிராமங்களுக்குச் சென்று பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடுவது, புதன்கிழமைகளில் தத்தம் அலுவலகங்களில் இருந்து பொது மக்களைச் சந்தித்தல் என்றவாறான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

**இந்திரன்:** தேவலோக மாநாடு பாதை மாறிப் போகின்றது போல நான் கருதுகின்றேன்.

**பிரம்மா:** பாதை மாறவில்லை–பாதைகள் எவ்வாறு பழுதடைந்தன– அவற்றை எங்ஙனம் திருத்த முடியும்? என்று ஆராய்கின்றோம்.

**இந்திரன்:** வட மாகாணத்திற்கு மத்திய அரசு அதிகாரம் வழங்க வேண்டுமல்லவா?

**பிரம்மா:** அது ஒரு புறம், எங்களால் முடிந்த விடயம் என்ற ஒன்று உண்டல்லவா? அதைப் பற்றித்தான் சித்திரகுப்தனார் கூறுகிறார்.

**இந்திரன்:** நீங்களும் யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற கூட்டங்கள் மாதிரித்தான் நடத்துகிறீர்கள்.

**விஷ்ணு:** தெய்வேந்திரா! சேவல் கூவுவது போல கூவி, ஏமாற்றுவதற்கு இங்கு கௌதம முனிவர் இல்லை என்பதை மறந்து விடாதே.

**இந்திரன்:** சிவப்பிரபு! விஷ்ணுவின் உரைக்கு கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டும்.

**யமன்:** வடக்கு மாகாணத்தில் தீர்மானம் கொண்டு வருவது போல இங்கும் தீர்மானமா? (சபையில் சிரிப்பு)

(தொடரும்)

# அமெரிக்காவின் தீர்மான வரைபு தமிழர்களை ஏமாற்றியுள்ளது

## மனோ கணேசன் விசனம்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமை ஆணைக் குழுவில் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைபு, தமிழ் மக்களையும், சிங்கள தீவிரவாதிகளையும் ஒருசேர ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் ஒரு துணைக்கருவியே தவிர அது மாத்திரம் எமக்கு நிம்மதியையும், நியாயத்தையும் கொண்டுவந்து தந்துவிடாது என்றும், உள்நாட்டிலே இந்த அரசுக்கு எதிரான ஜனநாயக போராட்டம் மற்றும் தென்னிலங்கை அரசியல் நகர்வுகள் மூலமாகவே தமிழ் மக்கள் நியாய இலக்கை அடைய முடியும் என நாம் எப்போதும் சொல்லி வந்தது இன்று சரியாகியுள்ளது எனவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இலங்கை வந்து செல்லும் அமெரிக்க அரச பிரமுகர்கள் வரிசையாக வடக்கு க்கு சென்று பேச்சுவார்த்தைகள் நடத் திய போதிலும், துன்புற்று வாழும் தமிழ் மக்களின் துன்பங்களுக்கு அவர்கள் முன்னுரிமை கொடுக்கவில்லை என இன்று தெரிய வந்துள்ளது.

சர்வதேச விசாரணை என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்ட போதும், இன்று அமெரிக்க அரசு இலங்கை அரசுக்கு மீண்டும் கால அவகாசம் கொடுத்துள்ளது என்பதுதான் நிதர்சனம். அதேபோல அமெரிக்க தீர்மானம் மூலம் "இதோ, அதோ வருகிறது, மின்சாரக் கதிரை " என கோஷமிட தயாராக இருந்தவர்களுக்கும் இந்த தீர்மான வரைபு ஏமாற்றத்தை தந்துள்ளது.

இவை ஜனநாயக மக்கள் முன்னணிக்கு ஆச்சரியம் இல்லை. ஆனால், எதிர்பார்த்து இருந்தவர்களுக்கு ஏமாற்றம் ஆகும்.

கைது செய்யப்பட்டு, சரணடைந்து, கடத்தப்பட்டு சிறைகூடங்களில் வாடும் தமிழ் கைதிகளின் பிரச்சினைக்கு தீர்வு இல்லை. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், அனைத்து சிறைக் கூடங்களிலும், உண்ணாவிரத போராட்டத்தை நடத்திய கைதிகளுக்கு விசேட நீதிமன்றங்களை அமைப்போம் என அமைச்சர்கள் நிமல் சிறிபாலவும், ரவுப் ஹக்கீமும் உத்தரவாதம் வழங்கினார்கள். இன்று வரிசையாக கைதிகள் இறந்து போவதை தவிர எதுவும் மாற்றம் பெறவில்லை.

சமீபத்தில் என்னை சந்தித்த ஒருகாலத்தில் மலையகத்தில் இருந்து சென்று வன்னியில் குடியேறி வாழும் ஒரு தமிழ தாய் இப்படி சொன்னார். "ஐயா, என் கணவனை கடத்தி போனார்கள். மகனையும இராணுவம் பிடித்துகொண்டு போனது.

இப்போது என் பிரச்சினை என் கணவரையும், மகனையும் தேடுவது அல்ல. என் பருவ வயது மகளையும், என்னையும் பாதுகாத்து கொள்வதே என் போராட்டம்". இது போர் முடிந்த வலயத்தில் வாழும் சுமார் ஒரு இலட்சம் நிர்க்கதியாயுள்ள தமிழ் மகளிரது கண்ணீர் படலத்தின் ஒரு சிறு துளி.

வடக்கு மாகாணசபை எப்படி நடக்கிறது என மன்மோகன் சிங், நமது ஜனாதிபதியைக் கேட்டாராம் என ஊடக செய்தி கூறுகிறது. அதற்கான பதிலை வழங்கக்கூடிய பொருத்தமான நபர் விக்னேஸ்வரன் ஆகும். அவர் அதை ஏற்கெனவே கூறிவிட்டார்.

வடமாகாணசபை என்ற வெற்று பாத்திரத்தையே தொடர்ந்து தூக்கிக் கொணடு இருக்க வேண்டும் என அரசு நினைப்பதை பட்டவர்த்தனமாக விக்னேஸ்வரன் கூறிவிட்டார்.

இவற்றையெல்லாம் அமெரிக்க வரைபு கணக்கில் எடுக்கவில்லை. சர்வதேச சமூகம் அல்லது அமெரிக்கா அனைத்து தீர்வுகளையும் அள்ளி வழங்கும் என, உள்நாட்டு ஜனநாயக போராட்டங்களை ஒத்தி வைக்க கூடாது. சர்வதேச சமூகம அவசியம்தான். ஆனால், அது துணை பாத்திரம்தான் வகிக்க முடியும்.

நாம் வாழும் பூமியில் நாம் அரசியல்ரீதியாக பலமாக எம்மை நிலை நிறுத்திக்கொண்டு ஜனநாயக போராட்டங்களை முன்னெடுப்போம் என்றும், தென்னிலங்கை அரசியல் நகர்வுகளுடன் ஒன்றிணைவோம் என்றும் நாம சொல்லி வந்தவை சரியாக அமைந்து விட்டன என்றார் மனோ கணேசன். (செ-11)

## தங்கம் கடத்திய நால்வர் கைது

(சென்னை)

தங்கம் கடத்திய நான்கு இலங்கையர்களை இந்திய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் தங்கத்தை கொண்டு செல்ல முற்பட்ட இலங்கையர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை விமான நிலைய அதிகாரிகள் குறித்த இலங்கையர்களை கைது செய்துள்ளனர்.

இதேவேளை சென்னை விமான நிலைய அதிகாரிகள்,நேற்று முன் தினம் தங்கம் கடத்திய 16 பேரை கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 9.5 கிலோ கிராம் எடையுடைய தங்கம் மீட்கப் பட்டுள்ளது.

டுபாய், சிங்கப்பூர், மஸ்கட், கொழும்பு ஆகிய விமான நிலையங்களிலிருந்து சென்றவர்களிடமிருந்து தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

நான்கு இலங்கையர்களும் ஒரு இந்தியரும் மொத்தமாக 800 கிராம் எடையுடைய தங்கத்தை கடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்) ஆகிய கற்கைநெறிகளை இலவசமாக ஆரம்பிக்கவுள்ளது.

இவ் அனைத்து கற்கை நெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.


இக்கற்கை நெறிகள் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1–ம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது காரைநகர் தொழிற் பயிற்சி நிலையம், வ்லந்தலை எனும் இடங்களில் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் [illegible] இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் கேட்டுள்ளார். (அ-2)

## சத்திய தரிசனம்



நாம் மற்றவரது நலம், ஆரோக்கியம், செல்வம் ஆகியவற்றுக்காகப் பிரார்த்தனை செய்வோம்!. யாருக்கும் கெடுதல் ஏற்படவேண்டும் என விரும்பாதீர்கள். இந்த உலகில் வெறுப்புக்கே இடமில்லை. எல்லோரும் நண்பர்கள். நீ தொடர்ந்து அனைவரும் நலமாய் இருக்கவேண்டும் என்று பிரார்த்தித்து வந்தால் நீ இந்த உலகம் முழுமைக்கும் ஒரு எடுத்துக்காட்டாய் விளங்குவாய்!

கோபம், வெறுப்பு, பொறாமை ஆகியவற்றால் நிரம்பப்பட்ட ஒரு மனிதன் யாராலும் அவனுக்கு நெருங்கிய சொந்தங்களான மனைவி, மக்கள் ஆகியோராலும் கூட விரும்பப்படமாட்டான். ஆகையால் நீ இத்தகைய தீய குணங்களை விலக்கவேண்டும். முதலில் அன்புத் தத்துவத்தைப் புரிந்து கொண்டால் இத்தீய குணங்கள் எல்லாம் தானாக ஓடிவிடும். மனிதத் தன்மை தான் தெய்வீகம் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பெண்களுக்குச் சிறப்புக் குறிப்புக்கள்

- பெண்கள் எப்போதும் மூன்று இடங்களில் குங்குமம் இட வேண்டும். மாங்கல்யம், நெற்றி, முன் வகிடு மத்தியில். இது தெய்வீகப் பண்புகளைப் பெற்றுத்தரும்.
- ஸ்டிக்கர் பொட்டு வைக்கவேண்டாம். குங்குமப் பொட்டு வைத்தலே உடலுக்கு நல்லது. தாலியை நூலாகிய சரட்டில் கோர்த்து அணிவதுதான் சிறப்பு. அத்துடன் தேவையான சங்கிலி முதலியவற்றை அணியலாம். நூலாகிய தாலி சரட்டிற்குப் பஞ்சபூத சக்திகள் அதிகம். தங்கச்சங்கிலியில் தாலியைக் கோர்த்து அணிந்தால் பஞ்சபூத சக்திகள் கிடைப்பதில்லை.
- கோயில்களில் பிரார்த்தனையாக மற்றவர் ஏற்றிவைத்த தீபத்திலிருந்து நாம் நம்முடைய தீபத்தை ஏற்றக்கூடாது. நாம் தனியாகத் தீப்பெட்டி கொண்டுசென்றுதான் நம் விளக்கை ஏற்றவேண்டும். பிறர் தங்கள் தோஷ நிவர்த்தியாக வேண்டிக்கொண்டு ஏற்றிவைக்கும் விளக்கில் நம் விளக்கை ஏற்றினால் நமக்குத்தான் தோஷம் ஏற்படும்.
- காதில் தோடு, மூக்கில் மூக்குத்தி, கையில் வளையல், காலில் மெட்டி முதலியவை அணிகலன்களாக இருந்தாலும் மங்கலப்பொருட்களாக கருதப்படுகின்றன. இவை இல்லாமல் ஒரு பெண் இருக்கக்கூடாது.
- தாலி என்பது ஒரு மங்கலப்பொருள். எனவே அணிகலன் களைப்போல் தினமும் அதைக்கழற்றி வைப்பதும் மறுநாள் எடுத்து அணிந்து கொள்வதும் தவறு. அது எப்பொழுதும் கழுத்திலேயே இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்

# தலைவர் வெற்றிக்கிண்ணம் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் சம்பியன்





இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான 2014 ஆம் ஆண்டுக்கான வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்திய இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசில் வழங்கல் நிகழ்வும் அண்மையில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன நிறைவேற்று பணிப்பாளர் அனுரா டீ சில்வா, பொதுச் செயலாளர் உபாலி ஹேவகேவும் கலந்து சிறப்பித்தார்கள்.

இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ட்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் முதற்பாதியில் எந்த அணியும் கோல் எதனையும் போடவில்லை. ஆட்டத்தின் இரண்டாம் பாதியின் 53 ஆவது நிமிடத்தில் நவஜீன்ஸ் அணிக்கு கிடைத்த நேர் உதையினை சரியாக உதைக்க அவ்வணிவீரர் மணிவண்ணன் தலையால் முட்டி அபாரமாக கோலாக்கினார்.

அதன்பின் நவஜீவன்ஸ் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அதன் பலனாக ஆட்டத்தின் 64 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் வீரன் பசீலன் தனது அணிக்காக மேலும் ஒருகோலை அடிக்க ஆட்டம்விறுவிறுப்படைந்தது. டயமன்ஸ் தொடர்ச்சியாக கோல் அடிக்க பல முறை முயன்றும் நவஜீவன்ஸ் பின்கள வீரர்களும் கோல் காப்பாளரும் சிறப்பாக செயற்பட்டமையினால் முறியடிக்கப்பட்டது. இந் நிலையில் ஆட்டத்தின் 80 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணிக்கு கிடைத்த பனால்டி உதையினை அவ்வணி வீரன் அனுராகாந்தன் கோலாக்கினார். இதனால் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது.





இருப்பினும் நவஜீவன்ஸ் பின்கள வீரர்களின் அபார ஆட்டம் தொடர்ந்து டயமன்ஸ் வீரர்களை கோல் எதனையும் மேற்கொண்டு அடிப்பதற்கு அனுமதிக்கவில்லை.

இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது நவீவன்ஸ் அணி.

வெற்றி பெற்ற அணிக்கு 15 ஆயிரம் ரூபா பணமும் வெற்றி கிண்ணமும், இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணமும் கிண்ணமும், இறுதி ஆட்ட நாயகன் விருது நவஜீவன்ஸ் வீரன் மணிவண்ணனுக்கும் வழங்கப்பட்டது. (கு-23)

## யாழ்ப்பாண கூடைப்பந்தாட்ட சங்க ஏற்பாட்டில்

# கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்











யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கழக அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் மின்னொளியில் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

கழக அணிகளுக்கிடையி லான ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டிகளுக்கு மேலதிகமாக 35 வயதிற்கு மேற்பட்ட வீரர்களுக்கான போட்டிகளும் இடம்பெற்றன.

முன்னதாக ஆண்களுக்கான இறுதிப் போட்டி இடம்பெற்றது. சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியும் சென்றலைட்ஸ் புளூஸ் அணியும் இவ் இறுதிப் போட்டியில் மோதியது. ஆட்ட நேர நிறைவில் இரு அணிகளும் 45:45 புள்ளிகளைப் பெற்றிருந்தன. இதனால் இரு அணிகளுக்கும் மேலதிக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன. மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் சம புள்ளிகளைப் பெற்ற மையால் போட்டி சமநிலையில் நிறைவடைந்ததுடன் கிண்ணம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

பெண்களுக்கான போட்டியில் உடுவில் மகளிர் வி.க.அணியும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் வி.க. அணியும் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இதில் 36:35 என்னும் புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் வி.க.அணி வெற்றி பெற்றது. 35 வயதிற்கு மேற்பட்ட அணிகளுக்கான போட்டியில் ஜொலி ஸ்ரார் வி.க. அணியும் யாழ்.பல்கலைக்கழக பழைய மாணவர் அணியும் மோதியது. முதற்பாதியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் வி.க.அணி முன்னிலை பெற்றாலும் இரண்டாவது பாதியில் சுதாகரித்த யாழ். பல்க




லைக்கழக பழைய மாணவர் அணி 40.35 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியனானது.

ஆண்கள் பிரிவில் போட்டிகளின் சிறப்பாட்டக்காரனாக சென்றலைட்ஸ் புளூஸ் அணியின் தயாளனும் தொடரின் சிறப்பாட்டக்காரனாக சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியின் சசிந்திரனும் தெரிவானார்கள்.

பெண்கள் பிரிவில் போட்டியின் சிறந்த வீராங்கனையாக யாழ்ப்பாணம் இந்து மகளிர் வி.க.அணியின் வீராங்கனை சானுஜாவும் போட்டி தொடரின் சிறந்த வீராங்கனையாக உடுவில் மகளிர் வி.க.அணியின் கமலீன் தெரிவானார்கள்.

35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியின் சிறந்த வீரராக பல்கலைக்கழக பழைய மாணவர் வி.க.அணியின் ஜெனில் போட்டி தொடரின் சிறந்த வீரராக ஜொலிஸ்ராரின் சண்தயாளனும் தெரிவானார்கள். (கு-23)


## இன்றைய போட்டி

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதன் ஒரு அங்கமான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 முதல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன. வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்மட்ப் போட்டிகளில் வெற்றி பெற்ற 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகள் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (கு-23)









புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் மாணவர்களுக்கு தீவக கல்விப் பணிப்பாளர் பரிசில் வழங்குவதையும் வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வெற்றி பெற்ற இல்லத்துக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானை வென்று ஆறுதலுடன் விடைபெற்றது இந்தியா



ஜடேஜா, அஷ்வின், மிஷ்ரா ஆகிய சுழல் கூட்டணியின் பந்து வீச்சினால் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஆசிய கிண்ணத் தொடரின் 9-வது லீக் போட்டியில் இந்திய அணி 106 பந்துகள் மீத மிருக்கையில் 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்று ஆறுதல் அடைந்தது.

5 அணிகள் பங்கேற்கும் 12-வது ஆசிய கிண்ணப் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதன் 9-வது லீக் போட்டி இந்திய-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையில் நேற்று மிர்பூரில் நடைபெற்றது.

இரு அணிகளும் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை தவற விட்டிருந்த நிலையில் சம்பிரதாய பூர்வமான போட்டியாக இப்போட்டி நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆப்கான் அணிக்கு சட்ரான் - மங்கல் இணை ஆரம்பம் வழங்கியது.

இவ் இணையில் சட்ரான் இந்திய வேகப் பந்துவீச்சாளர்களின் பந்துகளை பதம் பார்த்து ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருக்க, மறுபுறத்தில் மங்கல் பந்துகளை வீணடித்துக் கொண்டிருந்தார்.

இவர்கள் இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 30 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்தபோது 16 பந்துகளை தின்று வெறும் 5 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்த மங்கல் மொஹமட் ஷமியின் பந்தில் போல்ட்டானார்.

வேகப் பந்துவீச்சாளர்களை ஆப்கானிஸ்தான் வீரர்கள் எளிதாக எதிர்கொண்டதை அவதானித்த அணித் தலைவர் விராட் ஹோலி சுழல்பந்துவீச்சை கையாண்டார்.

அவரின் முயற்சிக்கு நிறையவே பலன் கிடைத்தது.

சுழல்பந்து மும்மூர்த்திகளான ஜடேஜா, அஷ்வின், மிஷ்ராவின் பந்துகளை சமாளிக்க முடியாமல் ஆப்கான் வீரர்கள் மிரண்டனர்.

இதனால் ஆப்கானிஸ்தான் வீரர்களின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளிகளில் வீழ்ந்து கொண்டிருந்தன.

அவ்வணி ஒருகட்டத்தில் 32.1 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெறும் 111 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தது.

எனினும் இத்தொடரில் துடுப்பாட்டத்தில் பிரகாசித்த ஷன்வாரியின் துடுப்பாட்டம் ஆப்கானிஸ்தான் அணிக்கு கைகொடுக்க அவ் அணி 45.2 ஓவர்கள் வரை தாக்குப்பிடித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களைக் எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஷன்வாரி 50, ஷட்ரான் 31 ஓட்டங்களை எடுத்தனர்.

இந்திய அணியின் பந்து வீச்சில் சுழல்கூட்டணியான ஜடேஜா 4, அஷ்வின் 3, மிஷ்ரா 1 எனவும் ஷமி 2 எனவும் ஆப்கானின் விக்கெட்டுக்களை பறித்தெடுத்தனர்.

160 ஓட்டங்கள் என்ற சுண்டங்காய் வெற்றியிலக்கை நோக்கி துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இந்திய அணிக்கு வழமையாக ஆரம்பத்தைக் கொடுக்கும் தவான் - சர்மா இணைக்குப் பதிலாக தவான் - ரஹானே இணை ஆரம்பத்தை வழங்கியது.

இவர்கள் இருவரும் இணைந்து அனுபவமற்ற ஆப்கான் பந்து வீச்சை இலகுவாக எதிர்கொண்டனர்.

இதனால் ஓட்டங்கள் மலைபோல குவிந்தன. அணியின் ஓட்ட எண்ணிக்கை 23.3 ஓவர்களில் 121 ஓட்டங்களாக அதிகரித்தபோது, ரஹானே 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ரோஹித் சர்மா களம் நுழைந்தார். ஆரம்ப விக்கெட் சரிந்து சரியாக 6 பந்துகளில் தவானும் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

களத்தில் நின்ற ரோகித் சர்மாவுடன் வந்திணைந்தார் தினேஷ் கார்த்திக்.

இவர்கள் இருவரின் இணைப்பாட்டம் இந்திய அணியை 32.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களால் வெற்றியிலக்கை அடையச்செய்தது.

களத்தில் ரோஹித் சர்மா, தினேஷ் கார்த்திக் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 18, 21 ஓட்டங்களை எடுத்தனர்.

ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சில் அஷ்ரப், நபி ஆகியோர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக இந்தியாவின் ஜடேஜா தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் போனஸ் புள்ளி அடங்கலாக 5 புள்ளிகளை கைப்பற்றிய இந்திய அணி புள்ளிகள் பட்டியலில் 9 புள்ளிகளுடன் 3-ம் இடத்தைப் பிடித்தது.

இத்தொடரின் இறுதி லீக் ஆட்டம் இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் மிர்பூரில் இன்று நடைபெறுகின்றது. (க)

### ஆசியக் கிண்ணம்



## ஜெயசூர்யாவின் சாதனையை தவறவிட்ட அப்ரிடி





ஆசிய கோப்பை போட்டியில் பங்களாதேஷுக்கு எதிராக பாகிஸ்தான் வீரர் அப்ரிடி நேற்று முன்தினம் அதிரடியாக விளையாடினார். அவர் 25 பந்தில் 59 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 7 சிக்சரும், 2 பவுண்டரியும் அடங்கும். அவர் 18 பந்தில் அரை சதத்தை அடித்தார். ஒரு பந்தில் ஜெயசூரியாவின் சாதனையை தவற விட்டார். ஜெயசூர்யா 1996-ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக 17 பந்தில் அரை சதம் அடித்ததே சாதனையாக உள்ளது.

அப்ரிடி 3-வது முறையாக இந்த சாதனையை தவறவிட்டுள்ளார். 1996-ம் ஆண்டு இலங்கைக்கு எதிராகவும், 2002-ம் ஆண்டு நெதர்லாந்துக்கு எதிராகவும் அவர் 18 பந்தில் 50 ஓட்டங்களை எடுத்து இருந்தார். அவுஸ்ரேலிய வீரர்கள் ஒடோனல் (1990 இலங்கைக்கு எதிராக) மேக்ஸ்வெல் (2013 இந்தியாவுக்கு எதிராக) ஆகியோரும் 18 பந்தில் அரை சதம் எடுத்து இருந்தனர். (க)



## வரம்பு...

தில்லை வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகம் எந்தவிதமான தங்கு தடையின்றி முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதற்கு நல்லதொரு உதாரணம் ஜனநாயக ரீதியில் நடத்தப்பட்ட வடமாகாண சபை தேர்தலாகும்.

வடமாகாண சபையின் தேர்தலை நடத்தி காட்டிய வடமாகாண சபையை நிறுவியமையானது இந்த நடைமுறையின் உச்ச தன்மையை எடுத்தியம்பியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் ஆளுநர் மற்றும் அரச உத்தியோகஸ்தர்களின் நியமனங்கள் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்திற்கு உட்பட்டவை. இருந்த போதிலும் இந்த நியமனங்கள் தொடர்பில் வெளிநாடுகளினதலையீடு வருந்தத்தக்கதாகும்.

வடமாகாணத்தில் 2009 ஆம் ஆண்டு இருந்ததனை விடவும் படையினர் குறைவாகவே இருக்கின்றனர். அங்கு 30 வீத படைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் 26 வீத படைக்குறைப்பு இடம்பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். படையினரால் பாலியல் துஷ்பிரயோகங்கள் முன்னெடுக்கப்பட்டதாக கூறப்படும் ஆதார பூர்வமற்ற குற்றச்சாட்டுகளை [illegible] இடம்பெற்றிருந்தால் மிக கடுமையான அதிகாரத்தினை நாங்கள் பிரயோகத்திருப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால், இலங்கை தொடர்பில்சர்வதேச விசாரணையை வலியுறுத்துமவிதத்தில் முன் வைக்கப்படும் பிரேரணையையும், இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையையும் நாம் நிராகரிக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

மிகக் கொடூரமான யுத்தம் இலங்கையில் முடிவடைந்துள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தேசியத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கில் இனப்பாகுபாடு காட்ட அரசாங்கம் முயலவில்லை. யுத்தத்திற்கு முன்னர் வடக்கில் 75 ஆயிரம் முஸ்லிம்களும் 35 ஆயிரம் சிங்களவர்களும் அங்கு வாழ்ந்தனர். எனினும் தற்போது சிங்களவர்கள் அல்லாதோர் 35 வீதத்தினர் கொழும்பில் வசிக்கின்றனர். இந்த நிலையில் இலங்கையில் ஓர் இனத்திற்கென்று பிரத்தியோகமாக ஒரு பிரதேசத்தை ஒதுக்கமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மத ஸ்தலங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கும் அரசுக்கும் எந்தத் தொடர்புமில்லை. அரசு அத்தகைய வன்முறை நடவடிக்கைகளை பொறுத்துக் கொள்ளமாட்டாது. காணாமற்போனோர் பற்றியும், பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள் வழங்குவது குறித்தும் ஆணைக்குழு விசாரணைகளின் பின்னர் ஒரு முடிவு எடுக்கப்படும் என்றார்.

ஒருசில நாடுகளின் சார்பில் வெளிநாடுகள் சில வரம்பு மீறி இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன என்று தெரிவித்த அவர் மனித உரிமை விவகாரமானது பொதுவானதாக இருக்க வேண்டும் என்றும் கூறினார். (செ-11)

## இளைஞர் குழு சேட்டை

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு முன்னால் கூடும் இளைஞர் குழுவினர் ஆசிரிய மாணவர்களோடு சேட்டை விடுவதனால் மாணவர்கள் சிரமத்தினை எதிர்நோக்குவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

கலாசாலைக்கு முன்னால் கூடுகின்ற இளைஞர் குழுவினர் கலாசாலைக்கு வருகின்ற பெண் ஆசிரிய மாணவர்களினை தகாத வார்த்தைகளை கூறி சேட்டை புரிவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விரைந்து நடவடிக்கையெடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (செ-4)

## செயலமர்வை நடத்த கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்களுக்கிடையிலான நல்லுறவைப் பேணுவது தொடர்பில் விழிப்புணர்வுச் செயலமர்வொன்றை முல்லைத்தீவு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் மா.இராஜகுமார் நடத்த வேண்டுமென கல்வியியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறாக விழிப்புணர்வுச் செயலமர்வை நடத்துவதன் ஊடாக மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்களுக்கிடையே நல்லுறவு பேணப்படும். அத்தோடு மாணவர்களுடன் எவ்வாறு அணுக வேண்டுமென்ற விடயங்களை அதிபர், ஆசிரியர்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

எனவே, விழிப்புணர்வுச் செயலமர்வை நடத்த வேண்டுமென கல்வியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

## மகளிர் தினம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மகளிர் தின விழா நாளை மறுதினம் 8.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை அதிபர் திருமதி நவலக்சுமி சந்திரகுமார் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

குடும்ப வறுமை காரணமாக பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மற்றும் இடைவிலகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களுக்கு யாழ்.வணிகர் கழகத்தின் நிதி அனுசரணையில் கடந்த 4 ஆம் திகதி பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டிருந்த நிகழ்வானது எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (அ)

## கூட்டமைப்பை...

ளுக்காக அந்தக் கட்சி எதனையும் செய்யவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு எதிராக சூழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டுக்கு நட்பான வகையில் எப்போதும் செயற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். கல்கிரியாகம பாதுகாப்புப் பாடசாலையில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மனித...

மனித எச்சங்கள் 80 பெட்டிகளில் தனித் தனியாக பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் ஒதுக்கப்பட்ட இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று புதன்கிழமை 33-வது தடவையாக. மனித புதைகுழி தோண்டும் முகமாக திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி உள்ள இடத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது குறித்த அகழ்வுப் பணியில் ஈடுபட்டு வந்த அனுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண, கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகர் விக்கிரமசேகர ஆகியோருக்கு இடையில் நீண்ட நேரம் கருத்து பகிர்வு இடம்பெற்றது.

இந்த கருத்து பகிர்வின் இறுதியாக குறித்த மனித புதைகுழியின் அகழ்வுப் பணி கள் நேற்று புதன் கிழமையுடன் முடிவுக்கு கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் பெட்டிகளில் அடைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள 80 மனித எலும்புக் கூடுகள் மற்றும் மனித எச்சங்களை ஆய்வுக்கு அனுப்பும் வகையில் அவற்றை எங்கு கொண்டு செல்வது தொடர்பில் எதிர்வரும் மே மாதம் 9-ம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


## தவறவிடப்பட்டுள்ளது

கணபதி கணேசலிங்கம் என்பவரது கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் HNB வங்கிப் புத்தகம் என்பவை சாவகச்சேரியிலிருந்து உரும்பிராய்க்கிடைப்பட்ட சாவகச்சேரி-மானிப்பாய் வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:-

0773912498, 0212054628

(5759)



### கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 17.03.2014 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான வியாபார நிலையங்களுக்கான ஏலமும் வாகன தரிப்பிடங்களுக்கான ஏலமும் எதிர்வரும் 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**முக்கிய குறிப்பு :**

2014 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரம், 2014 ஆம் ஆண்டுக்கான கரைச்சி பிரதேச சபையின் தற்காலிக உரிமம் என்பன பெற்றிருத்தல் வேண்டும். ஏலத்தின் போது முழுப்பணமும் செலுத்தப்படல் வேண்டும்.

புளியம்பொக்கணை ஆலய பரிபாலன சபை

(5739)



### வவுனியா மற்றும் யாழ்.நகரில் மீண்டும் புதுப்பொலிவுடன் Diploma in Mass Media (அறிவிப்பாளர் பயிற்சி)

வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா?

இதோ... காலம் : 3 மாதம்

Full Time / Part Time Course

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பர தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. பயிற்சி நிறைவுசெய்யும் மாணவர்களுக்கு 5 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்!

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச / தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றார்கள்.

அனைத்து வகுப்புக்களும் இம் மாதம் ஆரம்பம் 08/03/2014

தயாராகுங்கள் இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்பு மிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக ஊடகவியலாளராக வேண்டுமா?

BTEC BRITISH TECHNOLOGY & ENGLISH COLLEGE

#21, Sirampiyadi Lane, Jaffna. Tel : 0217904468, Mob :0777444225

பதிவுகளுக்கு விரையுங்கள்....!

(C-6678)



### ஐரோப்பாவுக்கான புதிய வாசல்....

- ஐரோப்பிய நாடான லத்வியாவுக்கு மிகக் குறைந்த செலவில் செங்கன் விசா மூலம் செல்வதற்கான புதிய வாய்ப்பு.
- ஜேர்மன், இத்தாலி, சுவிஸ், பிரான்ஸ் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்லலாம்.
- க.பொ.த. உயர்தரம் 3 பாடச் சித்தி போதுமானது. IELTS தேவையில்லை.

ஆவணங்களுடன் நேரில் வரவும்.

முற்பதிவு 077 36 16 798

Sikaram Gateway to Education & Employment

இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

www.sikaram.lk (C-6679)


## வயோதிப...

மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் ஊர்காவற்றுறை நாரந்தனை பகுதியைச் சேர்ந்த அருளப்பு அல்வினம்மா (வயது 70) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் மரணம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)




# IELTS Special Class

May - 10 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் Saturday & Sunday 8.30 a.m to 11.30 a.m திங்கள் தொடக்கம் வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை 3 மணி -5 மணி வரை நடைபெறும்

- MORE THAN 10 YEARS EXPERIENCE
- VOCABULARY and GRAMMAR
- EXTENDED SPEAKING PRACTICE
- WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

வகுப்புக்கள் - 10.03.2014 ஆரம்பம்

BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக) Tel: 0778803887

(C-6658)



### FALC FRENCH LANGUAGE CENTRE

யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.

# FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 774 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..

Note: எமது ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ் இலுப்பையடி, நெல்லியடியில் மட்டுமே.. எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறரர்கள்.......

| | | |
|---|---|---|
| ஆரம்பம்: 08.03.14 8.30am<br>No. 40, Palaly Road, Jaffna. இலுப்பையடி. | ஆரம்பம்: 11.03.14 at 11am<br>No.181, 1st Floor, Main Street, Nelliady. | Deutsch & Sinhala வகுப்புகளும்<br>021 320 2973<br>0779 789 456 |

(C-6652)


## 116 மீனவர்கள்...

வின் பேரில் யாழ்ப்பாணம் சிறையில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 116 மீனவர்கள் தங்களை விடுதலை செய்ய உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரியே இந்த உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து யாழ் இந்தியத்துணைத் தூதரகத்தின் உதவித் துணைத்தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி சிறைக்கு நேற்று மதியம் சென்று உணணாவிரதம் இருந்த 116 மீனவர்களுடனும் பேச்சு நடத்தியுள்ளார்.

இதனையடுத்து கைதிகளாகயிருக்கும் இந்திய மீனவர்களின் மருத்துவ வசதிகள் மற்றும் விடுதலைக்கான முயற்சிகள் குறித்து உறுதிமொழி வழங்கியதையடுத்து மீனவர்கள் அனைவரும் நேற்று பிற்பகலுடன்தமது உண்ணா விரதத்தை கைவிட்டதாகவும் உதவித் துணைத்தூதுவர் கூறினார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் சிறைக்கு வருகை தந்து கைதிகளாக உள்ள இந்திய மீனவர்களைப் பார்வையிடுவர், அவர்களது நலன்களைக் கவனிப்பர் என்று தூதரகம் சார்பில் மீனவர்களிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் இதனையடுத்து மீனவர்களின் உண்ணாவிரதப போராட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)


### BEACON

யாழ்நகர்

பொறியியல் தொழில்நுட்பம்

2-ம் தவணைப் பரீட்சைக்குரிய மாதிரி வினாக்கொத்து

ஆசிரியர்:-திரு.ராம்

(யாழ்.பிரபல பெண்கள் பாடசாலை)

ஆரம்பம்:-08.03.2014 சனி 8.00 மணி

(சி-6680)


## ஐ.நா பிரேரணையை...

காட்டியுள்ளார்.

தேசிய ரீதியான தேவைகளைக் கருத்திற்கொண்டு, எந்தவொரு அரசியல் வாதியும் தனது எண்ணப்படி செயற்படுவதற்கு உரிமையுள்ளதாக சல்மான் குர்ஷித் ஊடகவியலாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் பிரேரணை குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இதன் போது கருத்து தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பிரேரணையை ஆராய்ந்து பார்ப்பதற்கு இந்திய அதிகாரிகளுக்கு போதிய கால அவகாசம் காணப்படவில்லை என இருநாட்டு தலைவர்களின் சந்திப்பின்போது பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அறிவித்துள்ளதாகவும் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

மீனவர்களின் கைதுகள், கடல் எல்லைகள் மீறப்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் இரு நாட்டுத் தல்லைவர்களும் கவனம் செலுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்திய ட்ரோலர் படகுகளினால் இலங்கையின் கடல்சார் வளங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக இதன் போது இந்திய பிரதமரிடம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எடுத்துக்கூறியதாக சல்மான் குர்ஷித் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## மரண அறிவித்தல்

### திருமதி றோசலின் (ஜேமணி) திருச்செல்வம்



புதுக்குடியிருப்பு 8 ஆம் வட்டாரம் மந்துவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட றோசலின் (ஜேர்மனி) திருச்செல்வம் கடந்த (02/03/2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து அடைக்கலம் - மாகிறேற் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரோன் மரியான் - அன்னம்மா தம்பதியரின் மருமகளும், மரியான் திருச்செல்வம் (சின்னத்துரை) அவர்களின் அன்பு மனைவியும் காணாமல் போன அருட்தந்தை திருச்செல்வம் ஜிம்புறோன் அடிகளார், அலோசியஸ் (பிரான்ஸ்), யாழினி (பிரான்ஸ்), கலிஸ்ரா (லண்டன்), ஜெறோட் றீகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் அடைக்கலம் செபஸ்தியாம்பிள்ளை (பிரான்ஸ்), மனோகரன் புஸ்பம் (புதுக்குடியிருப்பு), அடைக்கலம் யேசுதாசன் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சியாமளா (பிரான்ஸ்), ஜான்சன் (பிரான்ஸ்), மில்ரன் (லண்டன்) டயானா (மன்னார்) ஆகியோரின் அன்பு மாமியும், அனோட், ஜெறீனா, யதுர்ஷா, ஜிம்சோன், கன்சிகா, ரதுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மரியான் சூசைமுத்துவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.03.2014) வியாழக்கிழமை பி.பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித சூசையப்பர் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித சூசையப்பர் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில், புதுக்குடியிருப்பு.
தொலைபேசி :
077 4981204, 0766623418 (5760)

தகவல் :
மரியான் திருச்செல்வம்
(கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.